# திருமறைத்தீபம்

**THE BIBLE LAMP**

மலர் 2 ஏப்ரில் - ஜூன் 1996 இதழ் 2

## கடிதங்கள்

தொடர்ந்து வரும் உங்கள் கடிதங்களுக்காக நன்றி வாசகர்களே. கடிதங்களே உங்கள் இதயத்தின் நுழைவாசல்; உங்களை எமக்கு அறிமுகப்படுத்தும் எழுத்தோவியங்கள். தொடர்ந்து எழுதுங்கள். உங்கள் கருத்துக்களையும் தெரிவிக்க மறவாதீர்கள். நீங்கள் எழுதிக் கேட்கும் கேள்விகளுக்கும் இனிப் பத்திரிகையில் பதிலளிக்க எண்ணியுள்ளோம்.

## இந்த இதழில்


- ஆசிரியர் மடல்
- திருச்சபை
- வில்லியம் கேரி . . .
- கிருபையின் போதனை
- சிரிக்கக்கூடிய . . .
- கிறிஸ்தவக் கோட்பாடுகள்
- கேள்வி ? - பதில்!
- திருமறைக் கோட்பாடுகள்
- எண்ணங்கள்


# வளரும் மலர் . . . . !

அன்புள்ள வாசகர்களே,

புது வருடம் பிறந்து மூன்று மாதங்கள் பறந்தோடி விட்டன. இப்பத்திரிகை பிறப்பதற்கு முன்பாக நாட்கள் இவ்வளவு வேகமாக நகர்ந்ததை நான் உணர்ந்ததில்லை. நகரும் நாட்களுடன் வேகமாகப் பொறுப்புகளும் அதிகரிக்கின்றன. கடந்த இதழுடன் பத்திரிகை ஆயிரம் பிரதிகளைத் தாண்டி நிற்கிறது. மேலும் பிரதிகள் கேட்டு எழுதுவோர் அநேகர். முடிந்த வரை எழுதுவோரின் தேவையை நிறைவு செய்ய நாம் முயற்சிக்கிறோம். தேவனுக்குப் பிரியமானால் மேலும் அச்சிட அவர் வகை செய்வார் என்பது எம் நம்பிக்கை. இத்தேவைகளுக்காகவும் கர்த்தரிடம் ஜெபத்தில் வாருங்கள். பத்திரிகையின் தேவைகளைப் பலவிதங்களில் தொடர்ந்து சந்திக்கும் அன்புள்ளங்களையும் ஜெபத்தில் நினைவு கூறுங்கள்.


நாங்கள் எழுதியனுப்பும் கேள்விகளுக்கு பதில் அளிப்பீர்களா? என்று வாசகர்களில் சிலர் கேட்டிருக்கிறார்கள். இவ்விதழிலிருந்து வாசகர்கள் எழுதியனுப்பும் கெள்விகளுக்கு பதிலளிக்கத் தீர்மானித்துள்ளோம். அவற்றில் தெரிவு செய்யப்பட்டவை ஏனையோரும் பயனடைய பத்திரிகையில் பிரசுரமாகும். உங்கள் கேள்விகளை சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதியனுப்பத் தவறாதீர்கள்.

நூல் அறிமுகத்தையும் தொடரத்தான் விருப்பம். ஆனால் தமிழில் அருமையான நூல்கள் குறைவாகவே உள்ளன. பத்திரிகையை வாசிக்கும் போதகர்கள், ஏன் வாசகர்கள்கூட நல்ல கிறிஸ்தவ தமிழ் நூல்களைச் சந்தித்தால் அவற்றை எங்களுக்கு அறிமுகப்படுத்தும்படி வேண்டுகிறோம். அவற்றை நாம் மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யலாம். அத்தோடு கிறிஸ்தவர்கள் மத்தியில் பல மோசமான நூல்களும் பிபலமாகியுள்ளன. அவற்றை அடையாளம் கண்டு மற்றவர்கள் பாதிப்படையாதிருக்க உதவுவதும் அவசியம். அத்தகைய நால்களையும் முடிந்தால் நீங்கள் அனுப்பி வைக்கலாம். இவ்விதமாக வாசகர்கள் எமக்கு அறியத் தந்த ஒரு நாலின் விளைவே திருமறையா? திராவிட சமயமா? என்ற சிறுநூலும அதன் தாக்கமும்.

கூடுதலான பக்கங்களுடன் இவ்விதழ் வெளிவருகின்றது. வாசித்துப் பயனடையுங்கள்.

மீண்டும் இப்பகுதியில் சந்திக்கும்வரை,
அன்புடன்,

ஆசிரியர்



# கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை

கர்த்தர் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையில் இன்று 'ஊழியம்' எப்பாடுபடுகின்றது என்று கடந்த இதழில் பார்த்தோம். ஊழியம் வேத அடிப்படையில் அமைய வேண்டும், ஊழியத்தைப் பற்றிய போலித்தனமான வேதத்திற்கு புறம்பான எண்ணங்களைத் திருத்தவேண்டுமென்பதுதான் இப்பத்திரிகையின் நோக்கமேயொழிய 'ஊழியத்தையோ, ஊழியக்காரர்களையோ களங்கப்படுத்துவது அல்ல. ஊழியம் செய்ய வேண்டுமென்பது பாராட்டுதலுக்குரிய ஒரு வாஞ்சையாக இருப்பினும் அதைக் கடைத்தெருவிற்கு கொண்டு வருமளவுக்கு இன்று நிலைமை மாறியிருப்பதை வேதம் அனுமதிக்காது.

## பஸ்நிலையத்தில் ஊழியத்திற்கு அழைப்பா?

சில வருடங்களுக்குமுன் ஒருமுறை இக்கட்டுரையாசிரியர் திருச்சியிலே பஸ்நிலையத்தில் இரவு பதினொரு மணியளவில் சென்னை போகும் பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது பஸ்நிலையத்தில் ஒலி பெருக்கி அலறிக் கொண்டிருந்தது. அதில் ஒரு தமிழக சுவிசேஷகர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். 'ஆண்டவர் இன்று உன்னோடு பேசுகிறார். உன்னை ஊழியத்திற்கு வரும்படியாக அழைக்கிறார்' என்று அந்த இரவு நேரத்திலே அவரது சத்தம் என் காதைத் துளைத்தெடுத்தது. அவரது பேச்சும் என்னைச் சிந்திக்க வைத்தது. யாரோடு இந்த மனிதன் பேசுகிறார்? கர்த்தர் தன் ஊழியத்திற்கு தன் மக்களைத்தான் அழைக்கிறாரே தவிர அவரை அறியாதவர்களை அழைப்பதில்லையே. ஏதோ அவரது ஊழியமே ஆள் இல்லாது திண்டாடுவதுபோல் இரவு நேரத்தில் பஸ் நிலையத்தில் இப்படி அலறத்தான் வேண்டுமா? இதற்கெல்லாம் வேதத்தில் என்ன ஆதாரம்? என்று சிந்தித்தேன். இப்படியாக உணர்ச்சி வசப்படும்படியாக கர்த்தரின் பெயரில் இல்லாததைச் சொல்லி ஆசை காட்டுவதனாலேயே இன்று அநேகர் விபரம் தெரியாது ஊழிய ஆசை பிடித்துத் திரிகிறார்கள்.

சமீபத்தில் என் கையில் கிடைத்த ஒரு கிறிஸ்தவ பத்திரிகையில் காணப்பட்ட ஒருவரின் சாட்சியும் என்னைத் திகைக்க வைத்தது அச்சாட்சியில் கடவுளை அறியாதிருந்த அம்மனிதர் தான் ஒரு கூட்டத்திற்குப் போனபோது அங்கே பேசிய மனிதர் தன் பெயரைச் சொல்லி அழைப்புக் கொடுத்ததாகவும், தன்னை கர்த்தர் ஊழியத்தில் பயன்படுத்தப் போவதாக அவர் மூலம் சொன்னதாகவும், அதைக் கேட்டே தான் கர்த்தர் மீது விசுவாசம் கொண்டதாகக் கூறியுள்ளார். தேவன் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தன் ஊழியத்திற்காக சிலரை இவ்விதமாக அழைத்திருந்தாலும் அவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம் (பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள்). அதாவது வரலாற்றில் நிகழப்போகும் சம்பவங்களுக்கும் இவ்வாறாக அழைக்கப்பட்டவர்களுக்கும் நேரடித் தொடர்பிருந்தது. திருச்சபை நிறுவப்பட்டபின்பு, வேதம் முழுமையாகக் கொடுக்கப்பட்ட பின்பு தொடர்ந்தும் இம்முறையில் ஊழியத்திற்கு மனிதரை அழைக்கப் போவதாக தேவன் வேதத்தில் எங்குமே போதிக்கவில்லை. திருச் சபையில்தான் ஏற்படுத்தும் போதகர்கள், மூப்பர்களே சபையில் அத்தகைய தகுதி பெற்றவர்களைத் தெரிந்து நியமனம் செய்ய வேண்டுமென்பது கர்த்தரின் போதனை. அதுமட்டுமல்லாது ஊழியம் செய்யலாம் என்று ஆசை காட்டி எவரையுமே இயேசுவோ அல்லது அவரது அப்போஸ்தலர்களோ கர்த்தரிடம் அழைத்ததில்லை.

> கர்த்தர் இவ்வுலகில் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை, இன்று என்றுமே இல்லாத அளவிற்குப் பேராபத்து சூழ்ந்துள்ளது. இந்தப் பேராபத்து திருச்சபையை தீவிரத்தோடு அழித்தொழிப்பதாக இல்லாமல், அதை ஒரு பொருட்டாகக் கருதாமல், அலட்சியப்படுத்துவதாக அமைந்துள்ளது. திருச்சபைக்கும், அதுபற்றித் திருமறை தரும் போதனைகளுக்கும் இன்று எங்கும் மதிப்பில்லை. திருமறையை அலட்சியம் செய்து, திருச்சபை என்ற பெயரில் கேலிக்கூத்துகள் நடத்துபவர்களும், திருச்சபையே தேவையில்லை என்று ஆணவத்தோடு அலைபவர்களுமே இன்று அவனியிலே பவனி வருகிறார்கள். திருமறை தெளிவோடு போதிக்கும், கர்த்தரின் அன்புக்குப் பாத்திரமான திருச்சபையைப் பற்றிய திருமறையின் போதனையை இத்தொடர்கட்டுரை அலசுகிறது.
>
> \- ஆசிரியர்.

## ஊழியப்பயிற்சி

ஊழியத்துறையில் இன்று வேதத்திற்குப் புறம்பான பல காரியங்களை நாம் அவதானிக்கும் அதேவேளை ஊழியத்திற்கு சிலரைத் தெரிவு செய்ய வேண்டிய அவசியத்தையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. ஊழியத்திற்கு வருபவர்களுக்கு இருக்க வேண்டிய பல்வேறு முக்கிய இலக்கணங்களைப்பற்றி விபரிக்கும் திருமறை அவற்றில் ஒன்றாக (1 தீமோத்; 2 தீமோத்) ஒரு ஊழியக்காரர் புதிய விசுவாசியாக இருக்கக்கூடாது என்று குறிப்பிடுகிறது. விசுவாசத்தில் வளர வேண்டிய ஒருவர் மற்றவர்களுக்கு எப்படிப் போதிக்க முடியும். அதுமட்டுமல்லாமல் ஊழியம் செய்யப் புறப்படுகிறவர்கள் திருச்சபையில் வளர்ந்தவர்களாக இருக்க வேண்டும். திருச்சபையின் வாசலையே கண்ணால் காணாதவர்களுக்கும், ஊழியத்திற்கும் எந்த விதத் தொடர்புமேயில்லை. இன்று இவ்விரண்டு முக்கிய உண்மைகளையும் எண்ணிப் பார்ப்பாரில்லை. சபைத் தொடர்பு இல்லாதவர்களும், எப்படியாவது ஊழியம் செய்ய வேண்டும் என்று அலையும், புது விசுவாசிகளான வாலிபர்களுக்கும் போட்டிபோட்டு தம்மை வளர்த்துக்

கொள்ள இன்று சிலர் புறப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய சாகச வார்த்தைகளிலும், அவர்கள் அளிக்கும் வசதிகளிலும் மயங்கி நிற்போர் அநேகர். பல கிறிஸ்தவ ஸ்தாபனங்களும், வேதாகமக் கல்லூரிகளும், தனிப்பட்ட நபர்களும் இன்று இதைப் பல நாடுகளிலும் செய்து வருகிறார்கள். திருச்சபைகளும், சபைப் போதகர்களும் வாலிபர்களைக்காத்துக் கொள்ள வேண்டுமானால் இத்தகையோரின் பிடியில் இருந்து விடுபட வேண்டும்.

ஊழியத்திற்கு யாரை எப்படித் தயார் செய்வது? திருமறையின் அடிப்படையில் நாம் சில உண்மைகளை இக்காரியத்தில் பின்பற்றுதல் அவசியம்.

1. ஊழியம் என்று இங்கு நாம் குறிப்பிடுவது வேதத்தைப் போதித்து மக்களை வழி நடத்தும் போதக ஊழியம், மூப்பர் பணி, உதவிக்காரர், புதிதாக சபை நிறுவும் ஊழியம் ஆகியவற்றைத்தானே தவிர இசை நிகழ்ச்சி, பாட்டுக் கச்சேரி நடத்தும் தாலந்துகளை அல்ல. ஏனெனில் வேதத்தில் எங்குமே இவை சபை நிறுவுதலுக்கும், அவற்றின் வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படும் ஊழியங்களாகக் குறிப்பிட்டுக் காட்டப்படவில்லை.

2. திருச்சபைக்கு முக்கியத்துவம் கொடுத்து, சபைக்கும், போதகர்களுக்கும் மதிப்புக் கொடுத்து, சபை வாழ்க்கைக்குத் தன்னை ஒப்புக் கொடுப்பவர்களே ஊழியத்தைப் பற்றிச் சிந்திக்கத் தகுதியுள்ளவர்கள். ஒருவருக்கு எத்தனை அற்புதமான தாலந்துகள் இருந்தாலும் சபை வாழ்க்கைக்குத் தன்னை ஒப்புக் கொடுக்காவிட்டால் ஊழியத்துக்கும் அவருக்கும் வெகுதூரம்.

2. புதிய விசுவாசிகளுக்கு சபைப்போதகர்கள் ஊழிய ஆசையை ஏற்படுத்தக்கூடாது. வளரும் குழந்தை எழுந்து நடக்குமுன் அதற்கு நடக்கக் கற்றுக் கொடுப்பதால் எந்தப்பயனுமில்லை. ஊழியக்காரர்கள் இல்லாத குறையால் ஆர்வமுள்ள புதிய விசுவாசிகளையும், நடக்கப் பழகும் இளைஞர்களையும் சிலர் ஊழியத்திற்குள் நுழைத்து விடுகிறார்கள். அனுபவமில்லாதவர்களையும், குழந்தைகளையும் வேலைக்குச் சேர்ப்பது உலக வழக்கமாக இல்லாதிருக்கும்போது அவற்றையெல்லாம் விட மேலான தேவ ஊழியத்தில் மட்டும் நாம் ஏறுக்கு மாறாக நடப்பது ஏன்?

3. எந்த ஊழியமாக இருந்தாலும் சரி ஒருவர் சபையில் அந்த ஊழியத்தை ஓரளவு செய்து சபையின் அங்கீகாரத்தைப் பெற்றவராக இருக்க வேண்டும். வீட்டில் மதிப்பில்லாதவர்கள் வெளியில் மதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது (1 தீமோ. 3:5). வெறும் ஊழிய ஆசை மட்டும் ஒருவர் ஊழியக்காரராவதற்குப் போதாது. அவர் ஊழியத்திற்கான தகுதிகளைக் கொண்டிருக்கிறார் என்று சபையார் அறிந்து கொள்ள வேண்டும், அவற்றால் பயனடைந்திருக்க வேண்டும். ஆகவே போதகர்கள் மூப்பர்கள் ஊழியத்திற்கு தகுதி பெற்றவர்களை சபையில் ஒரு வரம்புக்குட்படுத்தி பயன்படுத்த வேண்டும்.

4. ஒருவர் ஊழியத்திற்குப் பயன்படுவார் என்றறிந்தும் அவரை ஊழியப்பயிற்சிக்கென்று துரத்திவிடக்கூடாது. நாம் பின்பற்றும் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் போதிக்கும் வேதாகமக் கல்லூரிகள் இன்று மிகக்குறைவு. ஆசையுடன் வளர்த்த கிளியை பூனையின் கையில் ஒப்படைத்த கதி அநேக சபைகளுக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது. ஏதாவதொரு கல்லூரிக்குப் போனால் போதும் ஊழியக்காரராய் வந்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் அநேகர்.

5. சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றுவோர் அதிகரித்து வரும் இந்நாளில் ஏற்பட்டுள்ள புதிய ஆபத்தை நாம் தவிர்க்க வேண்டும். சீர்திருத்தக் கோட்பாடுகள் பற்றிய அறிவு மட்டும் ஒருவரை ஊழியக்காரராக்கிவிடாது. அவற்றில் ஒருவருக்கு பேரறிவு இருந்தும் தேவபக்தியென்பதே இல்லாமலிருக்கலாம். உண்மையான சீர்திருத்தவாதி அடக்கம், தாழ்மையுணர்வு, சபையாரில் அன்பு, ஜெபத்தில் உறுதி, நேர்மை ஆகிய பண்புகளைக் கொண்டிருப்பார். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாதது போல், வெறும் அறிவு மட்டும் ஊழியப் பணிக்குப் போதாது.

## சபை ஆட்சிமுறை

திருச்சபை ஆட்சியமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமில்லை என்பது இன்று சிலரின் கருத்து. இவர்களுடைய சிந்தனையை ஒருவிதத்தில் எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. சபைகள் பிரிந்து கிடக்கும் இக்காலத்தில் திருச்சபை ஆட்சியமைப்பை வலியுறுத்தினால் அவைகள் ஒன்று சேர்வதற்குத் தடை ஏற்படும் என்று இவர்கள் கருதலாம். வேறு சிலர் சுயநல நோக்கத்தினால் சபை அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. வேதத்தில் உள்ள எல்லா சத்தியங்களையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். சில சத்தியங்களில் நமக்குத் தெளிவில்லாமல் இருக்கலாம். அவற்றில் எமக்கு ஞானமில்லை என்பதால் அவற்றை நாம் முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது. சபை தொடர்ந்து வளரவும், நிலையானதாக அமையவும், கர்த்தரின் அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெறவும் அவரே திருச்சபை அமைப்பிற்குத் தேவையான எல்லா விளக்கங்களையும் தம் வார்த்தையின் மூலம் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

## தவறான ஆட்சியமைப்பு முறைகள்

இன்று அநேக சபைகளில் திருமறைக்கு முரணான, ஆபத்தான மூன்றுவித ஆட்சிமுறைகளைப் பார்க்கிறோம்.

**1. 'கமிட்டி' ஆட்சிமுறை** - வேதம் சபையை மூப்பர்கள்தான் ஆள வேண்டுமென்று போதிக்க பல சபைகளில் 'கமிட்டிகள்' ஆட்சி நடத்துகின்றன. இக்கமிட்டிகளில் இருப்போர் அநேகமாக செல்வாக்குள்ளவர்களாகவும், ஊழியக்காரருக்குரிய இலக்கணங்களைக் கொண்டிராதவர்களாகவும் அமைந்துவிடுகின்றனர். முக்கியமாக இக்கமிட்டிகள் போதகரை ஆட்சி செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கும்.

**2. ஜனநாயக மக்களாட்சி முறை** - திருமறை சபைக்குத் தலைவர் இயேசு கிறிஸ்து என்றும், அவரது ஆட்சி மூப்பர்கள் மூலம் அவரது வார்த்தையின் அடிப்படையில் அமைய வேண்டுமென்றும் போதிக்க இன்று அநேக சபைகளில் மக்களாட்சி முறையே நடைமுறையிலிருக்கின்றது. அதாவது சபையில் எடுக்க வேண்டிய எந்தவிதத் தீர்மானமும் சபை மக்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு வாக்குச்சீட்டைப் பயன்படுத்தி பெரும்பான்மை வாக்குப்பலத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. சபை மக்களுக்கு எது விருப்பமானது, விருப்பமில்லாதது என்ற அடிப்படையில் சபையில் காரியங்கள் நடக்கின்றன.

**3. ஒரே போதகரின் அதிகாரத் துஷ்பிரயோகம்** - அதாவது சபைப் போதகர் வேறு எவருக்கும் கட்டுப்படாது தான் நினைத்த விதத்தில் கேள்வி முறையின்றி செயல்படுவது.

இம்மூன்று விதமான ஆட்சி முறைகளையே இன்று அநேக சபைகளில் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் திருமறை இவற்றிற்கெதிரான போதனையையே தருகின்றது. திருமறையின்படி திருச்சபை கர்த்தரின் ஆட்சிக்குட்பட்டது. அங்கே மனித சிந்தனைக்கோ, வழிமுறைகளுக்கோ இடமில்லை. கர்த்தரின் வார்த்தையின்படி சபை ஆட்சிமுறை அமைய வேண்டியது அவசியம்.

## புதிதாக எழும் சீர்திருத்த சபைகள்

இன்று வேத பூர்வமாக சபைகள் அமைய வேண்டும், சீர்திருத்தக் கோட்பாடுகள் அடிப்படையில் கிருபையின் போதனைகளில் திளைத்து சபைகள் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் எங்கும் சபைகள் எழுந்து கொண்டிருக்கின்றன. புதிதாக எழும்பிக் கொண்டிருக்கும் இச்சபைகளில் உடனடியாக ஆரம்பத்திலேயே மூப்பர்கள் ஆட்சி அமைப்பு ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல. வேத இலக்கணங்களைக் கொண்டவர்களும், மூப்பர்பணி பற்றிய அறிவுள்ளவர்களையும் தெரிவு செய்து வளர்த்தெடுக்க காலம் செல்லலாம். ஒவ்வொரு சபையும் ஆரம்பித்த உடனேயே முழுமையான ஆட்சியமைப்பைக் கொண்டிருந்ததாக வேதம் கூறவில்லை. சில சபைகளில் இத்தகைய் ஆட்சியமைப்பு ஏற்படப் பல வருடங்கள் சென்றதாக வேதம் சொல்கிறது. மூப்பர்கள் ஒருவருக்கு மேல் இருக்க வேண்டுமென்று அவசரப்பட்டு தகுதியில்லாதவர்களை அப்பணியில் நியமிப்பதால் சபையே இறுதியில் பாதிக்கப்படும். சில சபைகள் அவை தோன்றிய காலத்திலேயே தேவனின் அருளால் மூப்பராகப் பணிபுரியத் தகுதியுள்ள பலரைக் கொண்டிருக்கலாம். அதே வசதி இன்னொரு சபைக்கு இல்லாமலிருக்கலாம். அத்தகைய வசதியில்லாத சபைகள் அதேகோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் சபைகளோடு தொடர்பு கொண்டு செயற்படுவது அச்சபைக்குப் பாதுகாப்பாக அமையும். ஆதிசபைகள் இதேவிதமாக ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு வளர்ந்தாக வேதத்தில் (அப்போஸ்தலர் நடபடிகள்) பார்க்கிறோம். ஆனால் ஆதி சபைகள் அப்போஸ்தலரின் கட்டுப்பாட்டிலிருந்தன. எனெனில் அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகக் கூடிய அதிகாரம் கொண்டிருந்தார்கள். இன்று அத்தகைய அதிகாரம் எவருக்குமே இல்லாததால் ஒரு சபை இன்னொரு சபையைக் கட்டுப்படுத்த முடியாது. ஐக்கியமும், பரஸ்பர ஆலோசனையும், உதவியுமே காணப்பட வேண்டுமேயல்லாது அதிகாரபூர்வமாக ஒருசபை மற்ற சபையைக் கட்டுப்படுத்த முயலக் கூடாது.

## திருமறை போதிக்கும் சபை ஆட்சி அமைப்பு

திருமறை கிறிஸ்து இயேசுவையே சபைத் தலைவராகக் காண்பதால் எந்தவொரு திருச்சபையும் அவரது வார்த்தைக்கு மதிப்பளித்து அதன்படி சபை ஆட்சிமுறை அமையும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படித் திருமறை போதிக்கும் சபை அமைப்பு யாது?

1. சபை மூப்பர்களால் ஆளப்பட வேண்டும். அதாவது ராஜாவாகிய கிறிஸ்துவின் வசனப்படி அடையாளங்காணப்பட்ட மூப்பர்கள் கர்த்தரின் வார்த்தையின்படி அவரது பிரதிநிதியாக இருந்து சபையை ஆள வேண்டும். உதாரணமாக மத்தேயு 18:15-17; அப்.20:17, 28; 1 தீமோ. 3:1-7; தீத்து 1:5-9; 1 பேதுரு 5:2; எபிரே. 13:7, 17 ஆகிய வேதப்பகுதிகள் மூப்பர்களின் இம்முக்கிய பணியை வலியுறுத்துகின்றன. திருச்சபைக் கோட்பாடுகளைப்பற்றித் தெளிவாக எழுதிய வேத வல்லுனர்களில் முக்கியமானவரான ஜோன் ஓவன் "சபை ஆட்சிமுறை அல்லது கிறிஸ்துவின் அதிகாரத்தைச் சபையில் கையாளும் பணி மூப்பர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. மூப்பர்களாக இருக்கும் அனைவரும் ஆளும் உரிமையைக் கொண்டுள்ளார்கள், அவர்களைத் தவிர வேறு எவருக்கும் சபையில் ஆளும் உரிமை கிடையாது."[1] என்று கூறியுள்ளார். அதுவும் இன்றைய சூழ்நிலையில் இம்மூப்பர்கள் ஆண்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூற வேண்டியதும் அவசியமாகிறது.

திருமறை இவ்வாறு போதிக்க அதன் வழி செல்லாமல் சபைகளில் 'கமிட்டிகளை' ஏற்படுத்திக் காரியங்கள் செய்வது தவறு. இதன் மூலம் நாம் செய்யும் தவறுகளை அவதானிப்போம். முதலாவதாக, யார் கமிட்டியில் இருக்க வேண்டும் அவர் எத்தகைய தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை நாமே முடிவு செய்பவர்களாக இருக்கிறோம். ஏனெனில் வேதம் கமிட்டியைப் பற்றியோ, அதிலிருப்பவர்கள் தகுதி பற்றியோ எதையுமே கூறுவதில்லை. இதன் மூலம் கர்த்தர் சபையில் யார் ஆள வேண்டும், அவர் எத்தகைய தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அதற்கெல்லாம் நாம் தடையாக அமைந்து விடுகிறோம்.

இரண்டாவதாக, உலகப் பிரகாரமாக அமையும் சபைக் 'கமிட்டி'யிடம் மூப்பர்களுக்கு இருக்கும் ஊழிய வாஞ்சை, ஆடுகளை வழி நடத்தும் பக்குவம் ஆகியவற்றை நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் காரிய சித்தர்களாக இருந்த போதும் சபை நடத்தத் தேவையான முக்கிய இலக்கணங்கள் இல்லாதிருப்பதால் சபையின் ஆவிக்குரிய வளர்ச்சி குன்றும்.

மூன்றாவதாக, சபை மக்களை வழி நடத்திச் செல்வதில் வாஞ்சையுள்ள போதகர்களுடன் ஊழியம் செய்யவும், அவர்களுக்குத் துணையாக இருக்கவுமே கர்த்தர் மூப்பர்களை நியமிக்கும்படிக் கூறியிருப்பதால், மூப்பர்களாயில்லாத சபைக் 'கமிட்டி' அத்தகைய வாஞ்சையைக் கொண்டிராமல் போதகர்களின் ஊழியத்திற்குத் துணைபுரியார்கள்.

சில சபைகளில் மூப்பர்களுக்கான வேதபூர்வமான அடையாளங்களைக் கொண்டிருப்பவர்களை சந்தேகமற அறிந்து கொள்ளவும் சபையாக அவர்களை அங்கீகரிக்கு முன் அவ்வூழியத்திற்குத் தயார் செய்யவும் குறுகிய காலத்திற்கு 'கமிட்டி'யாக போதகர்களுடன் செயற்படும்படிச் செய்கிறார்கள். இங்கே இறுதி நோக்கம் தெளிவாக இருப்பதால் இது நல்லமுறையே. கண்ணை மூடிக்கொண்டு ஏனோதானோவென்று மூப்பர்களை நியமிப்பதைவிட இது மேலானது.

2. வேத இலக்கணங்களைக் கொண்டு நியமிக்கப்பட்ட உதவிக்காரர்கள் சபையின் நிதி, நிர்வாகக் காரியங்களைக் கவனித்தல் வேண்டும். இவர்கள் மூப்பர்களின் கீழ் இக் காரியங்களை சபை நன்மைகருதிச் செய்தல் அவசியம். மூப்பர்களுக்குள்ள அதிகாரம் உதவிக்காரர்களுக்கு கர்த்தரால் கொடுக்கப்படவில்லை. அதாவது சபையை ஆளும் பொறுப்பு அவர்களுடையது அல்ல. இதனால் உதவிக்காரர்களின் பணி தாழ்வுள்ளது என்று தீர்மானித்து விடக்கூடாது. கர்த்தரின் சபையில் உயர்வு தாழ்வு என்பவற்றிற்கு இடமில்லை. ஆனால் ஒவ்வொரு பணிக்கும் அவர் சில வரம்புகளை நியமித்துள்ளார். அதன்படி உதவிக்காரர்கள் மூப்பர்களின் கீழ் அவர்களுக்கு உதவியாக நிர்வாகக் காரியங்களைக் கவனிக்கும்

பொறுப்பைக் கொண்டுள்ளார்கள். போதித்து சபையை ஆளும் பொறுப்பு மூப்பர்களைச் சேர்ந்ததாயிருக்க, அவர்கள் அக்காரியத்தை எவ்விதத் தடையுமின்றிச் செய்யத் துணை புரியும் பொருட்டு நிர்வாகக் காரியங்களைக் கவனிக்க சபையில் உதவிக்காரர்களை நியமிக்கும்படிக் கர்த்தர் பணித்துள்ளார் (அப்போஸ். 6:1-7). அதுமட்டுமல்லாது, மூப்பர் களுக்கும், உதவிக்காரர்களுக்கும் இருக்க வேண்டிய இலக்கணங்களைப் பற்றிக் குறிப்பிடும் வேதப்பகுதிகள் உதவிக்காரர்கள் போதிப்பவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வில்லை (1 தீமோ. 3). அதாவது அவர்கள் வேதம் அறிந்தவர்களாக வும், ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சி யுள்ளவர்களாகவும் இருக்க வேண்டி யது அவசியமெனினும் அதிகாரபூர்வ மாக வேதத்தைப் போதிக்கும் செயலை வேதம் அவர்களிடம் எதிர்பார்க்கவில்லை.

ஜோன் ஓவன் இதுபற்றிக் கூறும்போது, "சபையின் எல்லாக் காரியங்களையும் கவனிக்கும் பொறுப்பு பிரதானமாகப் போதகர் களிடமும், மூப்பர்களிடமும் கொடுக் கப்பட்டிருந்தபோதும், உதவிக்காரர் கள் அவர்களுக்குத் துணையாக கீழ்வரும் பணிகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்:

1. சபையின் தேவைகளை, முக்கியமாக வறியோரின் தேவை களை மூப்பர்களின் கவனத்திற்குக் கொண்டுவரல்.

2. தமது கடமைகள் சம்பந்தப்பட்ட முக்கிய காரியங்கள் பற்றி மூப்பர்களுடைய ஆலோ சனையைப் பெற்றுக் கொள்ளல்.

3. சபையின் நிர்வாகக் காரியங்கள் அனைத்திலும் மூப்பர் களுக்குத் துணையாக இருத்தல்."[2] என்று கூறுகிறார்.

இன்று சில சபைகளில் உதவிக்காரர்களே மூப்பர்களைப் போல் சபை நடத்தி வருகிறார்கள். அதற்கு வேதம் இடம் கொடுக்க வில்லை. மூப்பர்களை நியமிக்காமல் அவர்கள் செய்ய வேண்டிய காரியங் களை உதவிக்காரர்கள் செய்வது சரியல்ல.

*3. சபை மூப்பர்கள் சபைக் காரியங்கள் சம்பந்தமாக தாங்கள் எடுக்கும் தீர்மானங்களை அங்கத்த வர்களின் உடன்பாட்டோடு (இணக் கத்தோடு) நடை முறைப்படுத்த வேண்டும்.* பெரும்பாலான சபை களில் இன்று சபை மக்களுக்கு எது பிடித்தமானது? எது பிடிக்காது? என்ற அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. தீர்மானங்கள் எடுக்க சபை கூடிவரும்போது பெரும் பான்மை வாக்குகளின் அடிப் படையில் அவை தீர்மானிக்கப் படுவது பரவலாகவே காணப்படும் முறையாகும். இத்தகைய ஜனநாயக அமைப்புக்கும் வேதத்திற்கும் வெகு தூரம். ஏனெனில் நாம் எற்கனவே கூறியது போல் சபைக்குத் தலைவராக கிறிஸ்துவே இருக்கிறார். அவரது ஆட்சியே சபைகளில் நடக்க வேண்டும். சபையின் தேவனாகிய கிறிஸ்துவின் ஆட்சி மூப்பர்கள் மூலமாக சபையில் நடைமுறையில் காணப்பட வேண்டும்.

வழமையாக சபைகளில் போதகர்களின் எதேச்சாதிகாரம் அல்லது ஜனநாயக மக்கள் ஆட்சி என்று இருக்கும் நிலமையை மாற்றி வேதபூர்வமான கிறிஸ்துவின் அர சமைப்பை ஏற்படுத்துவது எப்படி? இங்குதான் நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட, <u>மூப்பர்கள் தாம் எடுக்கும் தீர்மானங்களை சபையாரின் உடன் பாட்டுடன் நிறைவேற்ற வேண்டும்</u> என்ற கோட்பாட்டை விளக்க வேண்டியது அவசியமாகின்றது. இதை நாம் விளக்க முனையும்போது சில உண்மைகளைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது. அதாவது சபை ஒரு போதகரை நியமிக்கும் போது அவருக்கு தேவ செய்தியை வேதபூர்வமாகப் போதிக்கும் அதி காரத்தை வழங்குவதை உணர வேண்டும். போதகராக அவரை நியமித்த பின் நாம் விருமபியதைத் தான் அவர் போதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. வேதத் திலுள்ளதை மட்டுமே அவர் போதிக்க வேண்டும். சில வேளை களில் அவ்வாறு அவர் வேதத்தைப் போதிக்கும்போது அது நமக்குப் பிடித்தமில்லாததாக இருக்கலாம். ஆனால் நமக்குப் பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ கொடுக்கப்படும் போதனை வேதபூர்வமாக இருந்தால் அதை ஏற்று நம்மை மாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழி யில்லை. இவ்விதமாக போதகர்களின் மூலம் தனது வார்த்தையைப் பயன்படுத்திக் கர்த்தர் சபையில் தன் சித்தத்தை நிறைவேற்றிக் கொள்கிறார். போதகர்கள் வேதத்தில் இல்லாததை எடுத்துச் சொல்லாதவரை நாம் அவர்கள் போதனைக்கும், வழிநடத்த லுக்கும் கட்டுப்பட்டேயாக வேண்டும். இது கர்த்தருடைய ஆட்சிமுறை.

அதுமட்டுமல்லாமல் போதகர்களும், மூப்பர்களும் சபை வளர்ச்சி சம்பந்தமான பல தீர்மானங் களை எடுக்க வேண்டியுள்ளது. அத்தகைய தீர்மானங்களை அவர்கள் வேதத்தின் போதனைக்கேற்றதா என்று தீர்மானித்தபின் சபையின் முன் கொண்டுவர வேண்டியது அவசியம். அவ்வாறான நிலையில் சபை கூடி வரும்போது அங்கத்தவர் கள் அத்தீர்மானங்கள் வேதபூர்வமாக இருப்பின் அவற்றை ஏற்று உடன்பட வேண்டியது அல்லது இன்னொரு விதமாகக் கூறினால் அவற்றிற்கு இணங்க வேண்டியது அவசியம். இதை சில சபைகளில் கரங்களை உயர்த்திக் காட்டியோ, வேறு முறைகளிலோ செய்வார்கள். மூப்பர் கள் வேதபூர்வமாக விளக்கிய தீர்மானங்களை எதிர்ப்பதோ அல்லது அவை நடை முறைப்படுத்தப்படத் தடையாயிருப்பதோ ஆகாத காரியம். அதேவேளை மூப்பர்களும் ஒரு வேளை தாம் வேதபூர்வமாக எடுத்த தீர்மானங்களில் சபை மக்களுக்குத் தகுந்த விளக்கமில்லையெனக் கண்டால் அத்தீர்மானங்களை அவர்கள் மீது திணிக்க முயற்சிக்காது அவற்றைப் பொறுமையோடு தொடர் ந்து விளக்கி அவர்களுடைய உடன்பாட்டுடன் அவற்றை நிறை வேற்ற முயல வேண்டும். சபை மக்கள் அத்தீர்மானங்களை சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்று மூப்பர்கள் அறிந்து கொள்ள வேண்டி யது அவசியம். இவ்வாறே கிறிஸ்து இயேசுவின் அரசாட்சி மூப்பர்கள் மூலம் சபையில் நடைபெறுகிறது.

இங்கே மூப்பர்கள் சபை அங்கத்தவர்களின் உடன்பாட்டைக் கோருகிறபோது <u>அது அவர்களது அனுமதியைக் கோருவதாகக் கருதப் படக்கூடாது</u>. எனெனில் எடுக்கப் பட்ட தீர்மானங்கள் மூப்பர்களுடை யது. வேத அடிப்படையில் மூப்பர்கள் அத்தீர்மானங்களை ஏற்கனவே எடுத்துள்ளார்கள். தீர்மானம் எடுப்பது சபை அங்கத்தவர்களின் பொறுப்பு அல்ல, அது மூப்பர்களுக்குக் கொடுக் கப்பட்டுள்ள அதிகாரம். தீர்மானங் கள் சபைமுன் வருகின்றபோது அவை வேதபூர்வமாக இருக்கின்றவரை சபையார் அவற்றை ஏற்று நடப்பதன் மூலம் கர்த்தரின் ஆட்சிக்குட்படு கிறார்கள். இதைவிடுத்து அங்கத்தவர் கள் சபையில் தாறுமாறாகப் பேசி, தங்கள் உரிமையை நிலைநாட்டும் வழிகளைக் கையாள்வது, போதகர் கள், மூப்பர்களில்லாமல் சபையை நடத்துவது எல்லாம் உலகப்பிரகார மான நடவடிக்கைகள். இவற்றிற்கும் வேதத்திற்கும் எந்தவிதமான சம்பந் தமுமில்லை. (வளரும்)

1. John Owen, Vol.16, p. 106
2. Ibid. Vol.16, p. 151

# வில்லியம் கேரி

**'கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்' என்று கூறி, வாழ்நாளெல்லாம் கர்த்தருக்கே மகோன்னதமாக சேவை செய்தவரும், நவீனகால அருட்பணி ஊழியத்திற்கு அடிக்கல் நாட்டியவருமான வில்லியம் கேரியின் வாழ்க்கைச் சரிதம்.**

மோல்டன் கிராமத்தில் முதன் முதலாக போதக ஊழியத்தை ஆரம்பித்த கேரி பின்பு ***1789*** இல் இருந்து ***1793*** வரை லெஸ்டசயர் என்ற நகரத்தைச் சேர்ந்த பாப்திஸ்து சபைப் போதகராக இருந்தார். நகர ஊழிய அழைப்பு பலவிதத்தில் கிராம ஊழியத்தைவிடப் பெரிதாக இருந்தாலும் புதுச்சபை பல பிரச்சனைகளைக் கொண்டதாக இருந்தது. கடவுளை அறியாத தூர தேசத்து மக்களுக்கு அவரை வெளிப்படுத்த வேண்டும் என்ற தீ இதயத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த கேரியை இந்நகர ஊழியம் அப்பணிக்குத் தயார் செய்வதாகவே அமைந்தது. கிராம ஊழியத்தில் எத்தனையோ துன்பங்களைக் கர்த்தருக்காக அனுபவித்திருந்த கேரிக்கு இங்கு மேலும் பல துன்பங்கள் காத்திருந்தது. கிராம ஊழியம் கேரியின் தைரியத்தைச் சோதித்ததென்றால்; நகர ஊழியம் அவருடைய பொறுமையையும், ஞானத்தையும் பெரிதும் சோதித்தது. இவற்றின் மூலம் எதிர்காலத்தில் பாரத பூமியில் அரும்பணி புரியப் போகின்ற கேரியை தேவன்தான் தயார் செய்கின்றாரோ?

ஒரு போதகரிடம் பிறர் எதிர்பார்க்கும் கவர்ச்சிகள் எதுவுமே கேரியிடம் இருக்கவில்லை. அவர் பார்ப்பதற்குக் குள்ளமாகவும், கல்லூரிப் படிப்பெதுவுமில்லாமலும் இருந்தார். அவருடைய கரங்கள் காலணி தைக்கும் தொழிலால் கடினப்பட்டிருந்தன. மொத்தமாகக் கூறப் போனால் ஒரு கிராமத்துத் தொழிலாளியைப் போலத் தோற்றமளித்தார் கேரி.

புது ஊழியத்தில் ஆரம்பத்தில் ஏற்பட்ட தொல்லைகள் குறைந்து கேரியின் ஊழியம் பலரைக் கவரத் தொடங்கியது. சபை மக்கள் தங்கள் மத்தியில் ஒரு தீர்க்கதரிசி தோன்றியிருப்பதை உணரத் தொடங்கினார்கள். பலரும் சபையை நாடி வந்தனர். அநேகருடைய குருட்டுக்கண்களைக் கேரியின் ஊழியத்தின் மூலம் கர்த்தர் திறந்தார்.

கேரி ஒரு வாரத்தில் ஏழு தடவைகள் சபையில் பேசுவதோடு நிறுத்திக்கொள்ளாமல் பக்கத்துக் கிராமங்களான தேமர்ஸ்டன், சிஸ்டன், சில்பி, டெஸ்போர்ட் ஆகிய இடங்களிலும் சபைகளை ஏற்படுத்தினார். இக்கிராமங்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அவரது பிரசங்கத்தைக் கேட்கக் கூடினார்கள். இந்தியாவில் இருந்து லெஸ்டர் சபைக்கு கேரி எழுதிய முதல் கடிதம் இக்கிராம ஊழியங்கள்மீது அவருக்கிருந்த வாஞ்சையை எடுத்துக் காட்டியது.



சான்றோர் சரிதம்

### 'விசாரணை'

***1791*** இல் கிளிப்டன் என்ற இடத்தில் கூடிய நொதம்டன்சயர் பாப்திஸ்து சங்கத்திற்குக் கர்த்தருடைய அழைப்பு வந்தது. பல இளைய தலைமுறையினரைக் கொண்டிருந்த இச்சங்கத்தில் ஆண்டவரை அறியாதவர்களின் மனந்திரும்புதலுக்காக ஜெபிக்க வேண்டும் என்று ஜோன் சட்கிளிப் அழைப்பு விடுத்தார். சட்கிளிப்பும், ஆண்ட்ரு புள்ளரும் ஆவியின் பலத்தோடு தேவ செய்தியை அளித்தார்கள். புள்ளரின் செய்தி ஆகாய் 1:2 இன் 'இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்' என்ற வசனத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. ரைலன்ட் இதைப்பற்றிக் கூறுகையில் 'இச்செய்தி எல்லோருடைய இருதயத்தையும் தட்டியெழுப்பி நற்செய்தி ஊழியத்திற்கான ஆர்வத்தைத் தூண்டிவிட்டது' என்கிறார்.

இக்கூட்டத்திற்கு வந்திருந்த கேரி இந்நற் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நிலைமை சூடாக இருக்கும்போதே காரியத்தைச் சாதித்துக்கொள்வது நல்லதென்பதால், 'தற்போது ஏற்பட்டுள்ள ஆர்வத்தை செய்கையில் காட்ட வேண்டியது அவசியமென' எல்லோரையும் தூண்டிவிட்டார். கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக வெளிநாட்டிற்கு மிஷனரிகளாகச் செல்ல விரும்புபவர்களை முன்வருமாறு ஊக்கப்படுத்தினார். கேரி, தான் இவ்வளவு நாட்களாகக் காத்திருந்த பொற்காலம் நெருங்கி வருவதாக எண்ணி ஆனந்தப்பட்டார்.

கிளிப்டன் பாப்திஸ்து சங்கம் அன்று கேரியின் அழைப்பிற்குத் தலை சாய்த்திருந்தால் திருச்சபைக்குப் பெரும் மகிமையைத் தேடித் தந்திருக்கும். ஆனால் ஞானவான்கள், புத்திசாலிகள் என்று பெயர் பெற்றிருந்த பெரிய மனிதர்களெல்லாம் தாமும் பின்வாங்கியதோடு, இப்போது எந்த முடிவும் எடுக்கக் கூடாதென மற்றவர்களையும் தடுத்தனர். இரண்டு போதகர்கள்கூட அன்றைய நாளில் கேரியின் பக்கம் சேரவில்லை. இதைப்பற்றிக் கூறும் புள்ளர் 'இதனால் ஏற்படக்கூடிய துன்பங்களையெல்லாம் எண்ணிப் பார்த்த அவர்களது மனம் எதையும் செய்யத் தயங்கிப் பின்வாங்கியது.' என்கிறார். தானும் இம்முடிவுக்கே வந்ததாக புள்ளரும் ஒத்துக் கொள்கிறார்.

மிஷனரி ஊழியம் குறித்து எந்த முடிவையும் எடுக்க விரும்பாத சங்கம் கேரி தனது 'விசாரணை' என்ற தலைப்பில் எழுதிய சிற்றேட்டைக் கூடிய விரைவில் வெளியிடுவது நல்லதென்று மட்டும் ஆலோசனை கூறியது. கேரி எல்லா சபைகளுக்கும் இதைத் தெரியப்படுத்தட்டும். அதன் பின் இதற்கு எவ்வளவு ஆதரவு இருக்கின்றதென்பதை அளவிட்டு எந்த முடிவுக்கும் வரலாம் என்பதே சங்கத்தின் நோக்கமாயிருந்தது.

(வளரும்)

# கிருபையின் போதனைகள் என்றால் என்ன?

கடந்த இதழில் திருமறைக்கு முரணானவகையில் வேத விளக்க மளித்து கர்த்தரின் கிருபையையே எள்ளி நகையாடும் ஆமீனியனின் போதனைகளையும் அவற்றிற்கு எவ்வாறு ஒல்லாந்து தேசிய சமயக்குழு முடிவு கட்டியது என்றும் பார்த்தோம். இருந்தாலும் காலத்தால் அழியாத சத்தியங்களைப் போலவே சில வேளைகளில் பொய்யும் தலை தூக்குவதுபோல் ஆமீனியனின் போதனைகள் இன்றும் பலரைப் பல நாடுகளிலும் ஆட்டிவைத்துக் கொண்டிருக்கின்றது.

ஆமீனியனுடைய ஐந்து கோட்பாடுகளிலும் (கடந்த இதழைப் பார்க்க) உள்ள தவறுகளை நாம் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது. அவரது முதலாவது கோட்பாட்டில் கடவுளின் முன்னறிவு (Foreknowledge) தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே மனிதன் எதிர்காலத்தில் என்ன செய்வான் என்று முன்னோக்கிப் பார்த்து (Foresight) அதன்படி கடவுள் அவனைத் தெரிவு செய்தார் என்பது ஆமீனியனின் வாதம். திருமறை கடவுளின் முன்னறிவைக் குறித்து விளக்கும்போது, அவரது முன்னறிவு மனிதனில் காணப்படும் நன்மை, தீமையிலோ, அவன் செய்யும் அல்லது அவனால் செய்யக்கூடிய எந்தவித செயல்களிலோ தங்கியிருக்கவில்லை என்று போதிக்கின்றது. இவை இரண்டிற்கும் இடையில் பெரும் வேறுபாடு உள்ளது. கடவுள் காலங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராயிருந்து, மகா ஞானத்தைக் கொண்டிருப்பதால் அவரது முன்னறிவு அவரது பேரறிவைத்தான் விளக்குகிறதே தவிர வேறெதையுமல்ல.

தனது இரண்டாவது கோட்பாட்டில் இயேசு எல்லோருக்குமாகவே மரித்தார் என்ற ஆமீனியனின் போதனை திருமறைக்குப் புறம்பானது. பாவத்திலிருந்து மனந்திரும்பி தன்னை விசுவாசிப்பவர்களுக்காக மட்டுமே தன்னைப் பலி கொடுத்ததாக இயேசு திருமறையில் அறிவிக்கிறார். இதனால் பாவத்திலிருந்து மனந்திரும்ப மறுக்கிறவர்களுக்காக இயேசு மரிக்கவில்லை என்பது தெளிவு. இதைப்பற்றி பின்பு விபரமாகப் பார்ப்போம்.

தனது மூன்றாவது கோட்பாட்டில் ஆமீனியன் சொல்வது உண்மையைப் போலத் தோன்றினாலும் அதை அவனுடைய ஏனைய போதனைகளுடன் ஒப்பிடும்போது அதன் சுயரூபத்தைப் பார்க்க முடிகின்றது. தெய்வீகக் கிருபையின் அவசியத்தைப் பற்றி ஆமீனியன் போதித்தபோதும் அதனை அவன் இறைமையுள்ளதாகக் கருதவில்லை. தனிமனிதனுடைய துணையில்லாமல் தேவகிருபை அவனுள் ஒன்றுமே செய்யமுடியாது என்பதே ஆமீனியனின் போதனை. இது திருமறையின் போதனைக்குப் புறம்பானது.

> **'கிருபையின் போதனைகள்' என்ற சொற்றொடர் பலருக்குப் புதிதாக இருக்கலாம். சிலர் அது குறித்துக் கேள்விப்பட்டிருக்கலாம். மேலும் சிலர் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தும், அதில் தெளிவில்லாது இருக்கலாம். இக்கட்டுரை இப்போதனைகளை திருமறையின் அடிப்படையில் சரித்திர பூர்வமாக ஆராய்ந்து அறிமுகப்படுத்துகிறது.**

இதைத் தொடரும் நான்காவது போதனை மனிதன் தெய்வீகக் கிருபையை நிராகரிக்கும் வல்லமை கொண்டுள்ளதாகக் கூறுகிறது. ஆனால் திருமறையோ கிருபையின் வல்லமையுள்ள கிரியையை மனிதனால் தவிர்க்க (நிராகரிக்க) முடியாது என்று போதிக்கின்றது.

ஆமீனியனிசம் சிலர் நினைப்பது போல் திருமறையை இன்னொரு விதமாகப் புரிந்து கொள்ளும் ஓர் இறையியல் கோட்பாடு அல்ல. இதற்கும் திருமறைக்கும் எந்தவிதத் தொடர்புமேயில்லை. இது போலிப் போதனை. கர்த்தரின் கிருபையையும், இயேசுவின் திரு இரத்தப் பலியினால் ஏற்படுத்தப்பட்ட இரட்சிப்பின் வழிமுறைகளையும் நிராகரித்துத் தனி மனித இரட்சிப்பிற்கு அவனது வல்லமையையே ஆதாரமாகவும், ஊன்றுகோலாகவும் காணும் அற்பப்போதனை.

இதனை எதிர்கொண்டு உண்மையை நிலைநாட்டவும் பொய்யை வேரோடு அழிக்கவுமே 'டோர்ட்' குழு இதற்கு எதிரான, எதிர்காலத்தில் 'கிருபையின் போதனைகள்' என்று பெயர் பெற்ற கிருபையின் அடிப்படையில் அமைந்த ஐந்து கோட்பாடுகளை வெளியிட்டனர். அக் கோட்பாடுகளாவன:

1. மனிதன் பாவத்தால் முழுமையாகக் கறை படிந்துள்ளான்.
2. கடவுளின் தெரிந்து கொள்ளுதல் எதன் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டதல்ல. அது மனிதனில் காணப்படும் எதிலும் தங்கியிருக்கவில்லை.
3. கிறிஸ்துவின் மீட்பு குறிப்பிட்ட மக்களுக்காகவே பெறப்பட்டது.
4. பரிசுத்த ஆவியின் திட்ப உறுதியான அழைப்பு தவிர்க்க முடியாதது.
5. பரிசுத்தவான்களின் விடாமுயற்சி.

சுருக்கமாக இங்கே தரப்பட்டுள்ள இக்கோட்பாடுகளை பிற்பாடு நாம் விளக்கமாகப் பார்ப்போம். ஆனால் இவற்றிற்கும் ஆமீனியனின் போதனைகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. வரலாறு சந்தித்த இக்கருத்து வேறுபாடுகளில் காணப்படும் வித்தியாசம் மிக முக்கியமானது. ஏனெனில் அது கடவுள், பாவம், இரட்சிப்பு ஆகிய கிறிஸ்தவக் கோட்பாடுகளை அடியோடு மாற்றியமைப்பவை. இறையியல் வல்லுனரான ஜே. ஐ. பெக்கர் இதைப்பற்றிக் குறிப்பிடும்போது, "இவை இரண்டுக்குமிடையில் காணப்படும் வேறுபாடு அவை முதன்மைப்படுத்தும் காரியங்களில் தங்கியிராமல் அவற்றின் உள்

ளடக்கங்களிலேயே தங்கியுள்ளன. ஒன்று இரட்சிப்பைத் தரும் கடவுளைப் பற்றிப் போதிக்கிறது; இன்னொன்று மனிதன் தன்னை இரட்சித்துக் கொள்ளும்படியாக அவனுக்குத் துணை புரியும் கடவுளைப்பற்றிக் கூறுகிறது. இதில் கல்வினிசமோ, பிதாவின் தெரிந்து கொள்ளல், குமாரனின் மீட்பு, ஆவியின் அழைப்பு ஆகிய முப்பெருங் காரியங்களின் மூலமும் ஆவியானவர் இழந்து போனவர்களின் இரட்சிப்பை உறுதிப் படுத்துவதாகக் கூறுகிறது. ஆனால் ஆமீனியனிசமோ இவற்றில் எதன் மூலமாகவும் ஒருவர் இரட்சிப்பை நிச்சயமாக அடைவதில்லை என்று போதிக்கின்றது. இவை இரண்டுமே இரட்சிப்பின் கோட்பாடுகளைக் குறித்த இரு வேறு விளக்கங் களைத் தருகின்றன. ஆகவே இவ்விரு இறையியல் கோட்பாடுகளும் இரட்சிப்பைக் குறித்த கடவுளின் திட்டத்தை வெவ்வேறு விதமாகப் புரிந்து கொண்டுள்ளன. ஒன்று இரட்சிப்பு கடவுளின் கிரியையில் தங்கியிருப்பதாகவும், இன்னொன்று அது மனிதனில் தங்கியிருப்பதாகவும் போதிக்கின்றது; ஒன்று, விசுவாசம் கடவுள் அளிக்கும் இரட்சிப்பாகிய ஈவின் ஒருபகுதியாக இருப்பதாகவும், இன்னொன்று அது இரட்சிப்பிற்கு மனிதனின் பங்களிப்பாக இருப்பதாகவும் கருதுகின்றது; ஒன்று விசுவாசிகளின் இரட்சிப்பிற்கு கடவுளுக்கே எல்லா மகிமையையும் அளிப்பதாகவும், இன்னொன்று அம்மகிமையை கடவுளுக்கும் மனிதனுக்குமிடையில் பங்கிடுவதாகவும் உள்ளது. இவ்வேறுபாடுகளை நாம் அவதானிப்பது மிக அவசியம்.'' என்கிறார். இதில் கல்வினிசமே கடவுளை மகிமைப் படுத்தி இரட்சிப்பு அவர் தரும் மார்க்கம் என்று தெளிவாகப் போதிக்கின்றது. (வளரும்)

அடுத்த இதழில்:

**அருளுரைக்கு இன்று ஏன் ஆபத்து?**

*பிரசங்கம் பற்றிய கட்டுரைகள் அடங்கிய சிறப்பிதழாக வெளி வருகிறது அடுத்த இதழ்.*



# சிரிக்கக்கூடிய காரியமா?

**'டொரான்டோ ஆசீர்வாதம்' பற்றிய ஒரு கண்ணோட்டம்**

சிரிக்க வைக்கும் சிரிப்பலை மாயம் பற்றிய செய்தியை இப்பத்திரிகை மூலமாக முன்பே தந்திருந்தோம். கனடாவின் டொரான்டோ நகரில் உள்ள 'ஏர்போர்ட் வினியட் சபை'யின் மூலம் 1994 ஆம் ஆண்டில் இம்மாயம் முதன் முதலாக தலைப்புச் செய்தியில் இடம் பிடித்தது. பெந்தகொஸ்தே, பரவசக்குழுக்கள் மத்தியிலேயே பிரசித்தி பெற்று 'டொரொன்டோ ஆசீர்வாதம்' என்று பெயர் பெற்றுள்ள இதனைச் சிலர் ஆவியின் எழுப்புதல் என்று கூறினாலும் ஆண்டவரை இதுவரை அறியாத யாருமே அவரை இதன் மூலம் அறிந்து கொண்டதாக செய்தியில்லை. இதன் இன்றைய முக்கிய தலைவர்களில் ஒருவரான ரொட்னி-ஹாவார்ட் பிரவுன் இதனை எதிர்ப்பவர்கள் கண்கள் குருடாகி பேசமுடியாமல் போவார்கள் என்று பயமுறுத்தி வருகிறார். டொரான்டோவின் 'ஏர்போட் வினியட் சபை'யில் ஆரம்பிக்கு முன்பாகவே இம்மாயம் பெனி ஹின், ரொட்னி ஹாவார்ட் பிரவுன், கென்னத் கோப்லான்ட் ஆகிய மனிதர்களால் நடத்தப்பட்டு வந்தது. மொரிஸ் செரூல்லோ, போல் யொங்கி சோ ஆகியோரும் இதைக் குறித்து நூல்கள் எழுதியுள்ளனர்.

'நற்பேறளிக்கும் நற்செய்தி' (Prosperity Gospel) என்ற இயக்கத்தின் மத்தியிலேயே இம்மாயம் முதன் முதலாகத் தோன்றியது என்று இதுபற்றி ஆராய்ந்துள்ளவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். இவ்வியக்கம் விசுவாச இயக்கம் என்றும் அழைக்கப்படுகிறது. அமெரிக்காவில் அரம்பித்த இப்பரவசக்குழு கிறிஸ்து தனது திருஇரத்தப்பலியின் மூலம் விசுவாசிகளைக் கேட்டின் வல்லமையின் பிரதிபலிப்பான சகலநோய் களிலிருந்தும், வறுமையிலிருந்தும் விடுவித்திருக்கிறார்; ஆகவே விசுவாசிகள் இவ்வுலகில் பூரணமான உடல் நலத்துடனும் வறுமையே அறியாத வளத்துடனும் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று போதித்து வருகின்றது.

இச்சிரிப்பலை மாயம் இன்று கட்டுக் கடங்காது மேலைத்தேய நாடுகளிலும் வேகமாகப்பரவி வருகிறது. பெனி ஹின் இதைக் கடந்த வருடம் மே மாதம் தமிழகத்திற்கும் ஏற்றுமதி செய்திருக்கிறார் (சென்னை சீரணி அரங்கில் பென்னி ஹின்னின் கூட்டம் நடந்தது).. பரவசக்குழுக்களே இதனால் இன்று அதிகம் பாதிக்கப் பட்டுள்ளன. எது கர்த்தர் தரும் ஆசீர்வாதம் என்று அறிய முடியாத படி கண்கெட்டுப் போய் உள்ள இக் குழுக்கள் கண்களுக்கு அதிசய மாய்ப்படுகின்ற அனைத்தும் கர்த் தரின் ஆசீர்வாதமே என்று இச் சிரிப்பலை மாயத்தையும் இருகர மேந்தி வரவேற்கிறது. ஆனால் எல்லோருமே இவ்வலையில் விழுந்து விடுகிறார்கள் என்று சொல்வதற் கில்லை. சமீபத்தில் அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரத்தில் உள்ள ஒரு சபை எமக்கு அனுப்பிய நிருபத்தில் அந்நகரத்தைச்சேர்ந்த ஒரு பெரிய கெரிஸ்மெட்டிக் சபையில் இருந்து நூற்றுக்கணக்கான குடும்பங் கள் இச் சிரிப்பலை சபையில் அனுமதிக்கப்பட்டதை முன்னிட்டு வெளியேறியுள்ளதாக வாசிக்கிறோம். பல குடும்பங்கள் இம்மாயத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதே வேளை குருட்டுக் கண்களுடன் கண் மூடித்தனமாக எதையும் பின்பற்றும் கூட்டம் இதை வரவேற்று அர வணைப்பதையும் பார்க்க முடிகின் றது. இவர்களுக்காக நாம் அனு தாபப்படுகின்ற அதேவேளை சிரிப் புருவில் சிந்தையைக் குழப்ப வரும் இவ்வாபத்தைப்பற்றி விளக்காமலும் இருக்க முடியாது. இச்சிரிப்பு மாயம் ஏன் கர்த்தரின் ஆசீர்வாதம் அல்ல, ஆனால் சாத்தானின் புதிய தந்திரம் என்பதற்கான காரணங்களைக் கீழே தருகிறோம்.

1. இது நடக்கும் கூட்டங்களில் வேதத்திற்கு இடமில்லை. வேத வாசிப்போ, வேத போதனையோ இடம்பெறுவதில்லை. கர்த்தரைப் பற்றியும் நகைச்சுவையாக அடிக்கடி பேசப்படுகின்றது. இதை ஆரம்பித்து வைத்த கனடாவில் உள்ள ஒரு சபை விநியோகிக்கும் வீடியோ நிகழ்ச்சியில்

இதைத்தான் நாம் பார்க்க முடிந்தது. மொத்தத்தில் இக்கூட்டங்களில் ஒரு நகைச்சுவை விருந்தே கிடைக்கிறது.

2. இக்கூட்டங்களில் பார்வையாளரின் உணர்ச்சிகள் தூண்டப்பட்டு நிலத்தில் புரளுதல், சிங்கத்தைப் போலக் கர்ச்சனை செய்தல், கட்டுக் கடங்காமல் சத்தமிட்டு சிரித்தல், வலிப்பு வந்ததுபோல ஆடுதல் போன்றவையே இடம் பெறுகின்றன. முதலில் இதைச் செய்பவர்கள் ஆழ்ந்த நித்திரைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். ஹிப்னோடிசத்துக்கு உட்படுத்தப்பட்டவர்கள் போல் அதன்பின் அவர்கள் நிலைமாறி விடுகின்றது. ஒரு கூட்டத்தில் ஹாவார்ட்-பிரவுன் சில பிரபலமான 'கெரிஸ்மெட்டிக்' போதகர்களை மேடைக்கழைத்து அவர்களைப் பேச முடியாதபடி செய்து, அவர்கள் பேசுவதற்கு எடுக்கும் பிரயத்தனங்களை ஒரு நாடகம் பார்ப்பது போல் பார்த்து கூட்டத்தார் கைகொட்டிச் சிரிக்கும் படிச் செய்தார். பரிசுத்த ஆவியே இவர்களைப் பேசமுடியாதபடி செய்தார் என்று கூட்டத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டது. வல்லமையோடு பிரசங்கம் செய்யும் வரத்தைக் கொடுக்கும் பரிசுத்த ஆவி, போதகர்களைக் கூட்டங்களில் பேசமுடியாதபடிச் செய்து அவர்களை மக்கள் பார்த்துச் சிரிக்கும் நிலைக்கு கொண்டு வருவார் என்று வேதத்தில் எங்கே எழுதியிருக்கிறது? இதை தேவ ஆசீர்வாதம் என்று நம்புபவர்கள் கண்களும் சிந்தையும் நிச்சயம் குருடாய்த்தான் இருக்க வேண்டும்.

3. இதை எழுப்புதல் என்று கூற முடியாது. எனெனில் இத்தகைய கோமாளித்தனங்களுக்கும் எழுப்புதலுக்கும் சம்பந்தமேயில்லை. மெய்யான எழுப்புதல் நிகழ்ந்த காலங்களில் மக்களிடம் தேவ பயமிருந்தது. அங்கே வேதத்திற்கும் பிரசங்கத்திற்கும் பெருமதிப்பிருந்தது. பிரசங்கத்தின் மூலம் மக்களுடைய பாவம் உணர்த்தப்பட்டு மனந்திரும்புதல் ஏற்பட்டது. ஆனால் இக்கூட்டங்களில் கிறிஸ்தவர், கிறிஸ்தவர் அல்லாதவர் என்ற எந்தவித வேறுபாடுமின்றி எல்லோரும் சிரிக்கவும், மிருகங்களைப்போல் சத்தமிடும் அதிசயத்தை நாடும்படி மட்டுமே வற்புறுத்தப்படுகிறார்கள். வரலாறு சந்தித்துள்ள எழுப்புதல்கள் எவற்றிலுமே இத்தகைய செயல்கள் நிகழ்ந்ததில்லை. இவற்றிற்கு வேதத்திலும் எந்தவித ஆதாரமுமில்லை.

4. இதை பரிசுத்த ஆவியின் செயல் என்று கூற முடியாது. வேதத்தில் ஓரிடத்திலாவது இத்தகைய காரியங்களைப் பரிசுத்த ஆவி செய்வார் என்று நாம் வாசிப்பதில்லை. ஆவியானவருக்கும் இக் கோமாளித்தனத்திற்கும் எந்த சம்பந்தமுமிருக்க முடியாது. ஆவியானவர் பரிசுத்தமானவர்; அவர் ஆண்டவர். இதை மறந்து அவர் பெயரில் கூத்தாடுவதை கர்த்தர் மன்னிக்க மாட்டார். இத்தகைய செயல்களைப் புறமதங்களில்தான் பார்க்கலாம். சாத்தானின் கைங்கரியத்தால் சாமி வந்து ஆடும் நிலை கர்த்தரின் குழந்தைக்கு ஒருபோதும் ஏற்படாது. தூய ஆவியின் பெயரில் அவரால் நிரப்பப்பட்டிருக்கிறோம் என்று கூறி சாத்தானின் பிடியில் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கிறவர்களின் கூத்தின் இன்னுமொரு காட்சியே இச் சிரிப்பலை மாயம். உண்மையிலேயே ஆவியால் நிரப்பப்பட்டிருப்பவர்களிடத்தில் அமைதி காணப்படும்; அலங்கோலம் இருக்காது. இந்நிரப்புதலை ஒருவர் மற்றவருக்குக் கொடுக்க முடியாது. ஆவியானவர் தமது பணியை ஒருபோதும் ஒருவருக்கும் குத்தகைக்கு விடவில்லை. ஆவியால் நிறைந்திருப்பவர்களிடத்தில் ஆவியின் கனிகளின் வளர்ச்சியே காணப்படுமே தவிர ஆவியானவரை அவமதிக்கும் செயல்கள் காணப்படாது.

5. இச்சிரிப்பலை மாயத்தை வளர்ப்பவர்களின் போதனைகள் திருமறைக்குப் புறம்பானவை. 'விசுவாச இயக்கம்' என்றும் 'நற்பேறளிக்கும் நற்செய்தி இயக்கம்' என்றும் அழக்கப்படும் கூட்டத்தினரின் வழி வந்த இச்சிரிப்பலை மாயத்தலைவர்கள் நோய்களும், துன்பமும், வறுமையும் பிசாசினால் அனுப்பப்பட்டவை எனவும் அவற்றில் இருந்து விசுவாசிகளுக்கு கிறிஸ்து விடுதலை கொடுத்திருப்பதாகவும் போதிக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் தாம் விரும்புவதைத் தம் மனத்தில் உருவகப்படுத்தி அதைத் தமது விசுவாசத்தால் பெற்றுக் கொள்ள முயல வேண்டும் என்றும் போதனை செய்கிறார்கள். இவர்களைப் போறுத்தவரையில் விசுவாசம் கடவுள் நமக்குத் தரும் ஈவல்ல; அது ஒரு இயற்கை நியதி; இதைப் பயன்படுத்தி மனிதன் தான் நினைத்ததைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது இவர்களது நம்பிக்கை. இவையெல்லாம் திருமறைக்கு ஒவ்வாத மனித சிந்தனையில் முளைத்த களைகள். இத்தகைய போதனைகளைப் புறமதங்களில் உள்ள மூடநம்பிக்கைகளோடு மட்டுமே நம்மால் தொடர்புபடுத்த முடிகின்றது. இதற்கும் திருமறைக்கும் எந்த சம்பந்தமுமில்லை.

## பரிசுத்த வேதாகமம்

''1. இரட்சிப்புக்கின்றியமையாத சகல விதமான அறிவையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிவையும் அளிக்கக்கூடிய தவறிழைக்காத நியதியாகவும் (கட்டளை விதி), உறுதியானதும், போதுமானதாகவும் பரிசுத்த வேதாகமம் மட்டும் அமைந்துள்ளது. உள்ளுணர்வும், படைப்பின் கிரியைகளும் (பொது வெளிப்பாடு), மனிதன் எந்தவிதமான போக்கும் சொல்ல இடமளியாதபடி, தேவனுடைய ஞானம், வல்லமை, நற்குணம் ஆகியவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தினாலும், இரட்சிப்புக்கு இன்றியமையாத கடவுளைப்பற்றிய அறிவையும் அவரது சித்தத்தையும் வெளிப்படுத்த வல்லமையற்றவை. ஆகவே கடவுள் தமது திருச்சபைக்கு வெவ்வேறு காலங்களில் பல்வேறுவிதத்தில் தம்மையும் தம் சித்தத்தையும் வெளிப்படுத்தினார். அதுமட்டுமல்லாது, சத்தியத்தின் பாதுகாப்பிற்காகவும் பரப்புதலுக்காகவும், தீய மனிதர்கள், பிசாசு, உலகம் ஆகியவற்றின் தொல்லைகளின் மூலம் திருச்சபை பாதிப்புறாதபடி நிலை நிறுத்தப்பட்டு ஆறுதல் பெறவும், தம் சித்தத்தைக் குறித்தும் தம்மைக் குறித்துமான வெளிப்பாட்டை எழுத்துவடிவில் அருளவும் திருவுளங் கொண்டார்."

*(**1689** திருமறைக் கோட்பாட்டின் பரிசுத்த வேதாகமத்தைப் பற்றிய முதல் அதிகாரத்தின் முதலாவது பகுதி. )*

# வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகள்



*கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே 'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்ட்டின் லூதர் 1529-ல் இரண்டு திருமறைக்கல்விப் பாடநூல்களை எழுதினார். 1541-ல் ஜோன் கல்வினின் திருமறைக்கல்விப் பாடநூல் ஜெனீவா சபையில் பயன்படுத்தப்பட்டது. 1563-ல் வெளியிடப்பட்ட 'ஹெய்டில்பர்க் திருமறைக்கல்வி நூல்' அதுவரை வெளியிடப்பட்டவற்றில் சிறந்ததொன்றாக விளங்கியது. 1647-ல் 'வெஸ்ட்மின்ஸ்டர் அசெம்பிளி' தனது விசுவாச அறிக்கையை மட்டுமன்றி, அதன் சாராம்சத்தையும் 'சுருக்கமான திருமறைக்கல்வி' நூலாகவும் வெளியிட்டது. ரிச்சர்ட் பெக்ஸ்டர், மத்தியூ ஹென்றி போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தங்கள் சபை மக்களுக்கு திருமறைக்கல்வி மூலமாக கிறிஸ்தவப் போதனையை உணவாக ஊட்டி வளர்த்தனர். பாப்திஸ்துகள் மத்தியில் இதனைப் பயன்படுத்தியவர்களில் பென்ஜமின் கீச், ஜோன் பன்யன், சி. எச். ஸ்பர்ஜன் ஆகியோர் முக்கியமானவர்கள். ஸ்பர்ஜன் 1889-ல் திருமறையின் போதனைகளைத் தன்சபை மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து '1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையையும்', வெஸ்மின்ஸ்டர் திருமறைக்கல்வி நூல், பென்ஜமின் கீச்சின் திருமறைக்கல்வி நூல் ஆகியவற்றைத் தழுவிய திருமறைக்கல்வி நூல் ஒன்றையும் வெளியிட்டார்.*

**கேள்வி 25:** *கிறிஸ்து எவ்வாறு தீர்க்கதரிசியாகிய பணியைச் செய்கிறார்?*

*கிறிஸ்து எமது இரட்சிப்பிற்கான தேவசித்தத்தைத் தனது வார்த்தையாலும், ஆவியாலும் வெளிப்படுத்துவதன் மூலம் தீர்க்கதரிசியாகிய பணியைச் செய்கிறார்.*

*(யோவான் 1:18; யோவான் 20:31; யோவான் 14:26)*

**விளக்கக்குறிப்பு:** பவுல் எபேசியர் 2:20 இல் திருச்சபையானது 'அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டு அதற்குக் கிறிஸ்துவே மூலைக்கல்லாயிருக்கிறார்' என்று கூறுவதைப்பார்க்கிறோம். ஏனைய அடிக்கற்கள் மூலைக்கல்லைச் சார்ந்திருப்பதைப் போல், அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் இயேசு கிறிஸ்துவை சார்ந்திருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கடவுளின் வசனத்தை எடுத்துக் கூறும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சொன்னவையும், எழுதியவையும் கடவுளின் வார்த்தைகளேயன்றி வேறில்லை. அவர்கள் தங்களது சுய வல்லமையின் மூலம் பேசாமல் ஆவியின் வல்லமையினால் பேசினார்கள் (1 பேதுரு 1:11).

கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தபின் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் மூலம் கொடுக்கப்பட்ட தேவவெளிப்பாடு முடிவுக்கு வந்தது. கிறிஸ்துவே கடவுளால் வாக்குறுதியாகக் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசி. பவுல் கூறுவது போல், 'அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது' (கொலோ. 2:3). இதனாலேயே நாம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் மூலம் தரப்பட்ட வெளிப்பாட்டிலிருந்து புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலரின் காலத்துக்கு வருகிறோம். பழைய ஏற்பாடு முழுவதுமே கடவுளின் வாக்குறுதிகளாகும். புதிய ஏற்பாடு அவ்வாக்குறுதிகளின் நிறைவேற்றுதலாக இருக்கின்றது. புதிய ஏற்பாட்டிலும் நாம் தீர்க்கதரிசிகளைக் குறித்து வாசித்தாலும் அவர்கள் புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்படும் வரையிலான இடைவெளியை நிரப்புவதற்காக இருந்தார்கள். அது எழுதி முடிக்கப்படும் வரை நாம் இப்போது வாசிக்கும் வேத சத்தியங்களை ஏவுதலின் மூலம் அவர்களால் எடுத்துக் கூற முடிந்தது. ஆகவே கிறிஸ்துவின் நிறைவு செய்யப்பட்ட கிரியைகளின் அடையாளமாக (finished work) இன்று தீர்க்கதரிசிகளோ அல்லது அப்போஸ்தலர்களோ நம்மத்தியில் இல்லை. கடவுளின் வார்த்தை அல்லது வெளிப்பாடு, நிறைவு பெறாத வரையுமே அப்போஸ்தலரோ அல்லது தீர்க்கதரிசியோ நம்மத்தியில் இருக்க முடியும். தீர்க்கதரிசிகள் கிறிஸ்து எதைச் செய்யப்போகிறார் என்று வருமுன்னுரைத்தார்கள். அப்போஸ்தலர்கள் கிறிஸ்து செய்தவற்றை எழுதி வைத்தார்கள்.

போலிப்போதனைகள் அனைத்தும் கிறிஸ்து ஆவியினால் தனது வார்த்தையின் மூலம் பேசுவதையும் விட வேறு அதிகாரங்களை நாடி நிற்கின்றன. ரோமன் கத்தோலிக்கர்கள் அப்போஸ்தலர்களின் அதிகாரம் தொடர்ச்சியாகப் பிறருக்கும் கொடுக்கப்படுவதாக (போப்) போதிக்கிறார்கள். இவர்கள் (போப்) கடவுளின் வார்த்தையைப் பேசும் வல்லமை உடையவர்கள் என்பது அவர்களது போதனை. ஆகவே இவர்களைப் பொறுத்தவரையில் போப் பேசுகின்றபோது அது கடவுளே நம்மோடு நேரில் பேசுவதைப் போன்றது. இதனால் போப்பின் வார்த்தையில் எந்தத் தவறுமே இருக்க முடியாது. இப்போதனையின்படி கிறிஸ்து தனது தெய்வீக வெளிப்பாட்டை இன்னும் நிறைவு செய்யவில்லை. ஆகவே அவர் இறுதித் தீர்க்கதரிசியாக இருக்க முடியாது. தீர்க்கதரிசிகள் அவரோடு முடிவடையவில்லை. இங்கேயே நாம் ரோமன் கத்தோலிக்கப் போதனையின் போலித்தனத்தை உணர்கிறோம்.

அத்தோடு நம்மத்தியில் இன்று காணப்படும் பல போலிக்கூட்டங்களும் இத்தகைய புதிய வெளிப்பாடுகளைத் தமது போதனைகளின் ஒரு பகுதியாகக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மோர்மன்ஸ் கூட்டத்தார் 'ஜோசப் ஸ்மித்' என்ற மனிதனே கிறிஸ்துவிற்குப் பின் வந்த மெய்யான தீர்க்கதரிசி என்று போதிக்கிறார்கள். இதேவகையில் 'செவந்த் டே அட்வென்டிஸ்ட்', கிறிஸ்தவ விஞ்ஞானம், யெகோவாவின் சாட்சிகள் போன்றோரும் திருமறையோடு வேறு ஏதாவதையும் விசுவாசத்தின் அடிப்படை விதியாக அதிகாரபூர்வமாக சேர்த்துக் கொள்வதை அவதானிக்கலாம். இந்தவகையில் பரவசக் குழுவினரும் கூட இன்று திருமறையோடு தங்கள் தலைவர்களின் தீர்க்கதரிசனம், தனிமனிதர்களின் கனவுகள் போன்றவற்றையும் அதிகாரபூர்வமான தேவ வெளிப்பாடுகளாகக் கருதி வருகிறார்கள்.

கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரையில் கிறிஸ்து மட்டுமே திருச்சபையின் தீர்க்கதரிசியாக இருந்து திருமறையின் மூலம் தனது சபையோடு பேசுகிறார். இதனால் மற்றவர்கள் அவசியமில்லை என்று பொருளல்ல. ஏனெனில் கிறிஸ்துவே தனது சபைக்கு அப்போஸ் தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிஷேசகர்களையும், போதகர்களையும் அளிக்கிறார் (எபேசி. 4:8, 11). இவர்களில் சிலர் திருமறை எழுதி முடிக்கப்படும்வரையே தேவைப்பட்டனர் (தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தர்களும்). சுவிஷேசகர்களும் இன்று இல்லை. இவர்களின் பணி போதக ஊழியத்திற்குள் அடக்கப்பட்டுள்ளது.

இன்று போதகர்களையே நிரந்தர ஈவுகளாக கிறிஸ்து சபைக்குத் தந்துள்ளார். அதாவது கிறிஸ்து இன்று தொடர்ந்து இத்தகைய பணிகளுக்கு மனிதர்களை அழைக்கிறார். ஆனால் இவர்கள் புதிதாக எதையும் வெளிப்படுத்தாமல் வெட்கப்படாத ஊழியக்காரராயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவர்களாகவும், தேவனுக்கு முன்பே உத்தமர்களாக நிற்கும்படி ஜாக்கிரதையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும் (2 தீமோ. 2:15).

திருமறையே பூரணமான, எழுத்துருவில் உள்ள, தெளிவான, தானே தன்னை விளக்கக்கூடிய கடவுளின் வார்த்தையாக இருப்பதாலும், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அதை வாசித்து விளங்கிக் கொள்ளும்படி பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டிருப்பதாலும் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளையும்விட நாம் கிறிஸ்துவின் தீர்க்கதரிசிப் பணியினால் மேலான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டுள்ளோம். இதையே பேதுருவும், அவர்கள் (அப்போஸ்தலரும் ஏனையோரும்) வானத்திலிருந்து பிறந்த சத்தத்தைக் கேட்டதைவிடவும் 'அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் நமக்கு உண்டு' (2 பேதுரு 1:19) என்று திருமறையைக் குறித்துச் சுட்டிக் காட்டுகின்றார். ஆகவே கிறிஸ்துவின் சித்தத்தை ஆவியின் மூலமாக திருமறையில் இருந்து அறிந்து கொள்ளக்கூடிய பேற்றினைப் பெற்றிருப்பதால் இயேசு கிறிஸ்து கூறியதைப்போல, இன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் யோவான் ஸ்நானன் அறிந்திருந்ததைவிடவும் மேலான அறிவைக் கொண்டு காணப்படுகிறான் (மத்தேயு 11:11).


கடவுளைப் பற்றிய சகல அறிவையும், கிறிஸ்துவிற்குள்ளான இரட்சிப்பின் வழிமுறைகளையும் கிறிஸ்துவின் ஆவியின் மூலம் திருமறையிலிருந்து மட்டுமே அறிந்து கொள்ள முடியும் என்பதை நாம் வலியுறுத்திக் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். இதனால் வினாவிடைத் திருமறைக்கோட்பாடுகள், விசுவாச அறிக்கைகள் (1689 விசுவாச அறிக்கை) போன்றவை அவசியமற்றவை என்ற முடிவுக்கு நாம் வந்துவிடக் கூடாது. இவை திருமறையை மட்டுமே எடுத்து விளக்குவதால் நமக்கு மிகவும் பயனுள்ளவையாக உள்ளன. (திருமறைக் கோட்பாடுகளின் பயன் குறித்து இவ்விதழில் எழுதியுள்ளோம்) சாதாரண மனிதர்களான நமது மூதாதையர்களால் இவை எழுதப்பட்டிருந்த போதும் திருமறையின் போதனைகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்கும் இறையியல் நூல்களாக விளங்குகின்றன. திருமறையில் காணப்படும் அனைத்துப் போதனைகளையும் விரைவில் படித்து முடிக்கவும் இவை துணை புரிகின்றன. இக் கோட்பாடுகளைத் திருமறையோடு ஒப்பிட்டு, ஆராய்ந்து ஆவியின் துணையோடு படிக்கும்போதே சத்தியத்தில் நமது அறிவு மேலும் உறுதிபெறுகின்றது.

சிலர் சபை சொல்வதையோ, போதகர்கள் கூறுவதையோ அல்லது வேறு வேத வல்லுனர்கள் கூறுவதையோ வேத வாக்காகக் கருதுகிறார்கள். இது ரோமன் கத்தோலிக்க சபையின் வழியிலோ அல்லது அதைப்போன்ற போலிப் போதனைகளின் வழியிலோ போவதைப் போன்றதாகும். 'பரவசக்குழுக்களின்' மத்தியில் இதனை அவதானிக்கலாம். சபைத்தலைவரோ அல்லது யாரோ ஒரு ஊழியக்காரர் சொல்லும் வார்த்தைக்கும், சாதரண மனிதனின் தீர்க்கதரிசனங்களுக்கும், கனவுகளுக்கும் திருமறையைவிட மேலான இடத்தையும், மதிப்பையும் இவர்கள் அளிப்பதைக் காணலாம். ஒருவன் தான் விசுவாசிப்பதைக் கிறிஸ்துவின் மூலம் அவரது வார்த்தையாகிய திருமறையிலிருந்து பெற்றுக் கொண்டிராவிட்டால் அவனது அறிவு உறுதியானதோ, நிலையானதோ அல்ல.

16 ஆம் நூற்றாண்டு சீர்திருத்த காலத்தில் சாதாரண மனிதர்கள் திருமறையை வைத்திருக்கக் கூடாதெனக் கருதப்பட்டது. படிப்பாளிகள் மட்டுமே சபையின் கவனிப்பின் கீழ்அதை வாசிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. மார்டின் லூதரும் ஏனைய சீர்திருத்த வாதிகளும் இதற்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு மனிதனும் திருமறையை வைத்திருக்கவும் வாசிக்கவும் வேண்டும் என்பது அவர்களுடைய போதனை. அத்தோடு ஆவியின் துணையோடு சாதரண படிப்பறிவற்ற மனிதனும் திருமறையின் போதனைகளைப் புரிந்து கொள்ள முடியும் என்று அவர்கள் வாதிட்டனர். இது இன்று மீண்டும் வலியுறுத்திக் கூறப்படவேண்டிய பேருண்மை. படிப்பாளிகள், கற்றறிந்தவர்கள் என்று பெயர் பெற்றவர்களே இன்று திருமறையைப் புறக்கணிப்பதைப் பார்க்கிறோம். சில வேதாகமக் கல்லூரிகளையும், அதிலிருந்து வெளிவரும் இன்றைய மாணவர்களையும் பார்த்தாலே இது புரியும். வரலாறும் இதையே புலப்படுத்துகின்றது. இதற்காக ஆய்வாளர்களையும், புலமையையும் நாம் முற்றாகப் புறக்கணிக்கவில்லை. கிறிஸ்தவர்கள் திருமறைக்கு சமமாகவோ அல்லது அதற்கு மேலானதாகவோ வேறெதையுமே கருதக்கூடாதென்பதைத்தான் வலியுறுத்துகிறோம். ஒருவர் எவ்வளவு புலமை வாய்ந்தவராக இருந்தாலும் திருமறையின் நிகரற்ற அதிகாரத்தை விசுவாசிக்காவிட்டால் அவரது புலமையினால் எந்தவித நன்மையும் இல்லை. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்து தன் வார்த்தையில் போதிக்கும் சத்தியங்களுக்கே மேலான மதிப்பளிக்க வேண்டும். அத்தோடு திருமறையை ஜெபத்தோடு ஆவியின் துணையோடு அன்றாடம் வாசிக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள படம் இன்றைய நிலைமையை விளக்குவதாக அமைகின்றது.

**கிறிஸ்தவம்**

திருமறை மட்டும் 

**போலிப்போதனைகள்**

திருமறை + போப் / குரான் / திராவிட சமயம் / சம்பிரதாயங்கள் / மோர்மன் நூல் / வொட்ச் டவர் - (யெகோவாவின் சாட்சிகள்) / தனிமனித வெளிப்படுத்தல் / (இன்னும் எத்தனையோ)

> **"இத் திருமறைக் கல்வியை வேதபாட வகுப்புகளிலோ, ஞாயிறு பாடசாலைகளிலோ முறையாகப் போதிப்பது சபைமக்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கான வேத அறிவு பெற்று வளரத் துணைபுரிவதாக அமையும்."**


*திருமறைத்தீபம்*

*'திருமறைத்தீபம்' சவரின் கிரேஸ் சபையால்* ***(Sovereign Grace Church, Auckland, New Zealand)*** *வெளியிடப்படும் காலாண்டுப்பத்திரிகை. ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதங்கள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.*

*ஆசிரியர்: R. பாலா   தொலைபேசி எண்: (09) 527 1522*

**The Bible Lamp,**
**P. O. Box 62-159, Sylvia Park, Auckland, New Zealand**

# கேள்வி? - பதில்!



*வாசகர்கள் எமக்கு அனுப்பும் கேள்விகளில் தெரிவு செய்யப்பட்டவை ஏனையோரின் பயன்கருதி இப்பகுதியில் பிரசுரமாகும். - ஆசிரியர்*

## இசைவழி ஊழியங்களும் அருளுரையும்?!

*❋ இசைவழி ஊழியங்கள் பற்றிய தங்கள் கருத்தென்ன? தமிழ்க் கலாச்சாரத்துடன் ஆழ்ந்த தொடர்புடைய இசை நிகழ்ச்சியான 'வில்லுப்பாட்டு' போன்றவற்றின் மூலம் கர்த்தரின் செய்தியை எடுத்துச் சொல்லது தவறா?*

❋ கேள்வி சுருக்கமாக அமைந்துவிட்டபோதும் இதற்கான பதில் சுருக்கமாக அமைவது கடினம். இன்று பலர் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இசைவழி ஊழியங்கள் மூலம் கர்த்தரைப்பற்றி எடுத்துச் சொல்லி வருகிறார்கள். பலர் தங்கள் தாலந்துகளைப் பயன்படுத்தி இவ்வூழியத்தின் மூலம் தங்களைப் பெருமைப்படுத்திக் கொள்ளும் வேளையில், பல சிரமங்களுக்கு மத்தியில் இவ்வூழியத்தைச் செய்து வருபவர்களும் உண்டு. ஆனாலும் இவ்வகை ஊழியங்களை எவ்வாறு நியாயப்படுத்த முடியும், இவற்றிற்கு வேதம் அனுமதி கொடுக்கிறதா? என்று நாம் ஆராய வேண்டியது அவசியம்.

கர்த்தருடைய வழிபாடு பற்றியும், ஊழியங்கள் பற்றியும் திருமறையில் தெளிவான போதனைகள் கொடுக்கப்படவில்லை என்ற விதத்தில் இன்று பலரும் நடந்து வருகிறார்கள். ஆனால் திருமறை இது குறித்து தெளிவாகப் போதிக்கின்றது. திருமறையை விளங்கிக் கொள்ள அவசியமான விதிமுறைகளைப் பயன்படுத்தி வேதத்தைப் படிக்கும்போது அத்தகைய வழிமுறைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இவ்விதி முறைகளைக் குறித்துக் கேள்வி பதில் பகுதியில் முன்னொரு தடவை எழுதியுள்ளோம். கேள்வி நேரடியாக வழிபாட்டு முறைகளைப்பற்றியதாக இல்லாததாலும் அத்தோடு விபரமாக அதைக் குறித்து விளக்கமளிக்க இப்பகுதியில் இடமில்லாததாலும் சுருக்கமாக அதைப்பற்றி விளக்கிய பின் 'இசை வழி ஊழியங்களைப்' பற்றிய கேள்விக்கு வருவோம். எதற்கெடுத்தாலும் வேதமா? என்று கேட்கும் கூட்டத்தார் மத்தியில் அதனை மட்டுமே அதிகாரமாக ஏற்று எழுதுவது இப்பத்திரிகையின் நோக்கமாதலால் வாசகர்கள் இதைக் குறித்து சிந்தித்துப் பொறுமையாக ஆராயும்படி வேண்டுகிறேன்.

முதலில் வழிபாட்டு முறைகள் பற்றியும், ஊழியங்கள் பற்றியும் திருமறை தெளிவாகப் போதிக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும். கடவுள் தம்மை வெளிப்படுத்தியதோடு நின்று விடாமல் நாம் எவ்வாறு அவரை வழிபட வேண்டும் என்றும் தனது நியாயப் பிரமாணங்களின் மூலம் தெளிவாகப் பழைய ஏற்பாட்டு மக்களுக்குத் தெரிவித்தார் (யாத்திராகம் 20:4; 25; 25:8, 40; உபா.4:2; நீதி. 30:6; உபா. 12:29-32; லேவி. 10:1-7; 2 சாமு. 6:7). இவ் வேதப்பகுதிகளின்படி கடவுளின் வார்த்தையோடு எதையும் சேர்க்கவோ அதிலிருந்து எதையும் நீக்கவோ கூடாது. அத்தோடு அவர் ஏற்படுத்தித் தந்துள்ள வழிபாட்டு முறைகளில் நாம் கை வைக்கவும் கூடாது. அதைப் பின்பற்றிப் புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்துவின் அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்கள் புதிய ஏற்பாட்டு வழிபாட்டு முறைகளை சபைகளில் ஏற்படுத்தினார்கள் (அப்போஸ். 2:40; எபேசி. 5:19; 1 தீமோ. 4:13; 2 தீமோ.4:2). இதே அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நியமனப்படி சபைகளும், ஊழியங்களும் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்றும் புதிய ஏற்பாடு முழுதும் தெளிவாகப் போதித்துள்ளனர். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில், 1:15 - தேவனுடைய வீட்டில் எப்படி நடக்க வேண்டுமென்று நீ அறியும்படி இவற்றை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபை - என்று அப்போஸ்தலப் பிரதிநிதியான தீமோத்தேயுவுக்கே அறிவுரை செய்வதைப் பார்க்கிறோம். திருமறைக்கெதிரான வழிமுறைகளை தீமோத்தேயு கூட தேவசபையில் அனுமதிக்க அதிகாரம் பெற்றிருக்கவில்லை. இவற்றை மீறி கர்த்தருடைய காரியங்களைச் செய்தால் அவை அவரால் ஏற்றுக் கொள்ளப்படும் வழிபாட்டு முறைகளாகவோ ஊழியங்களாகவோ இருக்காது என்பது திருமறையின் முடிவு.

அடுத்து இசையைப்பற்றி நாம் பொதுவாக ஆராய்தல் அவசியம். இசை மனிதனுக்கு இதமளிக்கும் ஒரு சாதனம்; கலைகளில் ஒன்று இசை. முத்தமிழில் இசைத் தமிழும் ஒன்று. வேதம் இசையை நிராகரிக்கவில்லை. பழைய புதிய ஏற்பாட்டு

*வாசகர்கள் ஏங்கள் கேள்விகளுக்கு பத்திரிகை பதிலளிக்குமா? என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே உங்கள் கேள்விகளுக்கு நேரடியாகவோ அல்லது அவற்றில் தெரிவு செய்யப்பட்டவற்றிற்கு ஏனையோர் பயன்கருதி இப்பகுதி மூலமோ இனி பதிலளிக்கப்படும். கேள்விகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:*

**The Bible Lamp**
**P O Box 62-159**
**Sylvia Park**
**Auckland**
**New Zealand**

மக்களின் சமுதாய வாழ்க்கையில் இசையின் பங்கை வேதத்தில் பரவலாகப் பார்க்கலாம். இருந்தபோதும் இசை என்ற பெயரில் காணப்படும் எல்லாக் கலை வடிவங்களையும் திருமறை அனுமதிப்பதில்லை. இசை மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் சாதனமாக இருப்பது மட்டுமல்லாமல் மாறும் மனித உணர்ச்சி களைப் போல் தானும் மாறுதல்களுக்கு உற்படுகின்றது. சமுதாய மாறுதல்களுக்கு ஏற்ப இசையிலும் நல்லவையும் கேடானவையும் நுழைந்து விடுகின்றன. மேலை நாட்டு 'பாப்', 'ரெப்' இசை வடிவங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அதேபோல் தமிழ்க் கலாச்சாரத்தோடு தொடர்புடைய இசைக் கலை வடிவங்களிலும் தகுதியானவையும் தகுதியற்றவையும் உண்டு. அதாவது இறைவழிபாட்டுக்கும், இறை ஊழியத்திற்கும் தகுதியானவையும், ஏனைய சமயங் களில் கலை நிகழ்ச்சியாக மட்டும் பயன்படுத்தக் கூடியவையும் உண்டு. வேதம் நாம் எதையும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், கிறிஸ்தவ ஆராதனைக்கும், ஊழியத் திற்கும் ஏற்றவையா என்று ஆராய்ந்து பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதால் இசையில் நமக்குப் பொருந்தாவற்றை நாம் நிராகரிக்கப் பழக வேண்டும். இசை ஒரு கலை வடிவமாதலால் அது நமது உணர்ச்சி களைத் தூண்டிவிடும் வல்லமை கொண்டது. திருமறை நமது உணர்ச்சிகளுக்குத் தடை போடாவிட்டாலும் ஆராதனையிலும், ஏனைய ஊழியங்களிலும் இசையும் அதை வெளிப்படுத்தும் இசைக் கருவிகளும் அடக்கத்தோடு பயன்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. ஆராதனைக்கும், ஏனைய ஊழியங்களுக் கும் பங்கம் ஏற்படாத வகையில் இசை அமைய வேண்டும். இசை இறை ஆராதனைக்குத் துணையாகத்தான் இருக்க முடியுமே தவிர ஆராதனையிலோ, தேவ செய்தியளிக்கும் இடங்களிலோ பிரதான இடத்தைப் பெற முடியாது. நாம் இங்கு 'இசைவழி ஊழியங்களைப்' பற்றியே ஆராய்வதால் ஆராதனை பற்றிய விளக்கத்தை இத்தோடு நிறுத்திக் கொள்வோம்.

அடுத்ததாக, தமிழ்க் கலாச்சாரத் தோடு தொடர்புடைய இசை நிகழ்ச்சியான வில்லுப் பாட்டைப் பற்றிக் கவனிப்போம். வில்லுப்பாட்டு ஒரு இசைக் கலைச் சாதனம். இதைப் பற்றிப் பேசும்போது இன்னொரு கலைச்சாதனமான கதாப்பிரசங்கத்தைப் பற்றிப் எழுதுவதும் பொருந்தும். இந்துக்கள் மத்தியில் திருவிழாக் காலங்களில் கோவில்களில் கம்பராமாய ணம், பாரதம் போன்ற கதைகளைப் பாட்டோடு எடுத்துச் சொல்லப் பயன்படுத்தப்படும் கலை வடிவம் இது. கிருபானந்தவாரியார் இதற்குப் பெயர் போனவர். வில்லுப் பாட்டும் இதைப்போன்றதே. ஆனால் வில்லுப் பாட்டில் வில்வடிவில் அமைந்த இசைக்கருவி பயன் படுத்தப்படுகிறது. அத்தோடு வில்லுப்பாட்டில் பாட் டோடு கதையைச் சொல்லும் பிரதான பாத்திரத்திற்கு ஒத்துப்பாடி ஆமோதிக்கும் கூட்டமொன்றிருக்கும். மிகமுக்கியமாக வில்லுப்பாட்டில் நகைச்சுவைக்கு பிரதான இடமுண்டு. ஒருவர் தான் சொல்லப்போகும் விடயத்தை கற்பனைத்திறத்தோடு, உதாரணங்களுடன் இடையிடையில் பாட்டையும் கலந்து நகைச்சுவை யோடு வில்லுப்பாட்டில் சொல்வது வழக்கம். கேட் பவர்களின் ஆர்வத்தைத் தூண்டி தேவையான வேளை யில் அவர்களைச் சிரிக்க வைத்து மகிழ்ச்சியூட்டும் கலைச்சாதனம் வில்லுப்பாட்டு.

இத்தகைய அம்சங்களைக் கொண்ட வில்லுப் பாட்டு திருமறையின்படி நன்மையோ தீமையோ அல்லாத நடுநிலையில் அமைந்த (Things indifferent) ஒரு கலைச் சாதனம். வேதத்தில் ஒன்றை ஆதரித்தோ அல்லது அதற்கு எதிராகவோ எந்தவிதப் போதனையும் காணப்படாவிட்டால் அது Things indifferent ஆகக் கருதப்பட வேண்டும். அதாவது அதனால் ஒருவருக்கு நன்மையோ தீமையோ இல்லை. கலைச்சாதனங்கள் இந்தப்பிரிவில் அடங்கும். ஆகவே வில்லுப்பாட்டு கலைநிகழ்ச்சி என்ற அடிப்படையில் ஒரு சமுதாய கலைநிகழ்ச்சியாக அமைவதில் நாம் எவ்வித மறுப்பும் தெரிவிக்க முடியாது. ஆனால் தேவ செய்தியை அதிகார பூர்வமாக எடுத்துச் சொல்லும் கலைச் சாதன மாக இது பயன்படுத்தப்படலாமா என்பதுதான் ஆராயப்பட வேண்டிய கேள்வி.

> இன்று கிறிஸ்தவ ஊழியங்கள் தேவ வல்லமை யற்றிருப்பதற்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரசங்கத்திற்கு மதிப்பில்லாமல் போனதும் ஒரு முக்கிய காரணமாகும்.

ஆகவே, கர்த்தரின் சித்தத்தை அறிவிக்கும் வேதத்தை எடுத்துச் சொல்ல திருமறை ஏதாவது வழி முறைகளைக் காட்டுகிறதா என்று நாம் ஆராய வேண்டும். சிலர் வேதம் வில்லுப் பாட்டிற்கும், இசைவழி ஊழியங்களுக்கும் மறுப்புத் தெரிவிக்கவில்லை, ஆகவே அவற்றை அருளுரை வழங்கப் பயன்படுத்த லாம் என்று வாதாடலாம். வேதம் அநேக காரியங்களுக்கு வெளிப் படையாக மறுப்புத் தெரிவிக்கவில்லை என்பதற்காக அவற்றை எங்கேயும் எப்படியும் பயன் படுத்தலாம் என்று வாதாடுவது அறிவீனம். அதைவிட வேதம் அருளுரை வழங்கு வதைப்பற்றி என்ன சொல்கிறது என்று ஆராய்வதே சரியான முறை. அவ்வாறு ஆராய்கிறபோது அதைப்பற்றி வேதத்தில் தெளிவான போதனை இருக்குமானால் அதை விடுத்து வேறு வழிகளை நாடுவது முறையல்ல.

திருமறை நற்செய்தியை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று மட்டும் கூறாமல் அதை எவ்வாறு பகிர்ந்து கொள்ள வேண்டும், எத்தகைய சாதனத்தைக் கொண்டு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் போதிக்கிறது. எதைக் கொண்டு நற்செய்தி எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என்ற ஆராய்ச்சியை நம் கையில் விட்டு விடாமல் கர்த்தரே அதற்கான வழிமுறையைக் காட்டியுள்ளார். திருமறையின் போதனையின்படி 'பிரசங்கமே' கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட அருளுரை வழங்கும் பிரதான சாதனம். *I கொரி. 1:18-20* இல் பவுல் சிலுவையைப் பற்றிய உபதேசத்தைக் குறித்துக் குறிப்பிடும்போது கெட்டுப்போகிறவர்களுக்கு அது பைத்தியமாக இருப்பதாகவும், பைத்தியமாகத் தோன்றுகிற அப் 'பிரசங்கத்தினாலேயே' (the thing preached) ) விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று என்றும் போதிக்கிறார். இவ்வசனங்கள் நற்செய்தியின் அவசியத்தை மட்டுமல்லாது விசுவாசி களின் இரட்சிப்பிற்காக அதை எடுத்துச்சொல்லப் பயன்படுத்த வேண்டிய சாதனம் பிரசங்கம் எனவும் வலியுறுத்துகின்றன. ரோமர் பத்தாவது அதிகாரமும் இதைப் பற்றித் தெளிவாகப் போதிக்கிறது.

## ஒலி நாடாக்களில் அருமையான நூல்கள்

ஆளுகிறவர் யார்? (ஆர்தர் பின்க்), கடவுள் செயலின் இரகசியம் (ஜோன் பிளேவல்) ஆகிய இரு நூல்களும் ஒலி நாடாக்களில் வெளி வந்துள்ளன. (ஏற்கனவே இவை நால் வடிவில் உள்ளன. கடந்த இதழைப் பார்க்கவும்) இங்கிலாந்தில் இருந்து இயங்கும் நியூஸ் லைன்ஸ் மினிஸ்டிரீஸ் இதனை ஊழிய நோக்குடன் விநியொகிக்கின்றனர். முக்கியமாக பார்வையற்றவர்களுக்கு உதவுமுகமாக இவை தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனையோரும் நிச்சயம் கேட்டுப் பயனடையலாம். முகவரி:

Newslines, 7 Cambridge Close, Stockton Heath, Cheshire WA4 6SF, United Kingdom

'பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப் படுவார்கள்' என்று ரோமர் 10:14 இல் வாசிக்கிறோம். இங்கே பிரசங்கம் என்ற வார்த்தைக்கு (கிரேக்க மொழியில் κηρυσσω) 'அதிகாரபூர்வமாகவும், அதிகாரத்துடனும் எடுத்துச் சொல்லுதல்' என்று பொருள். அதாவது ஒரு அரசன் தன் கட்டளையை அதிகாரத்துடன் தன் மக்களுக்குத் தெரிவிக்கும் முறையை இவ்வார்த்தை படம் பிடித்துக் காட்டுகிறது. இவ்வார்த்தை வேதத்தின்படி உரைநடையாக வார்த்தையை எடுத்துரைப்பதைத்தான் விளக்குகிறதே தவிர இதில் கவிதைக்கோ அல்லது சங்கீதத்திற்கோ வேறு இசைவடிவங்களுக்கோ இடமில்லை. பழைய ஏற்பாட்டிலும் இவ்விதமாகவே இவ் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது (நெகேமியா 6:7; ஏசாயா 61:1; ஜோனா 3:2). திருமறையில் 65 தடவைக்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ள இவ் வார்த்தைக்கு இதைத் தவிர வேறெந்த அர்த்தமுமில்லை. கர்த்தரைப் பொறுத்தவரையில் பிரசங்க ஊழியமே அதிகார பூர்வமாக வேதத்தைப் போதிக்கும் முறை. அத்தகைய அதிகாரத்தோடு வேதத்தைப் போதிக்கும் சாதனமாக பிரசங்கத்தைத் தவிர வேறு எதுவும் தேவனால் தெரிவு செய்யப்படவில்லை (மாற்கு 3:14; லூக்கா 4:18; அப். 8:4,5; 2 தீமோத்தேயு 4:2). ஒரு நாட்டை ஆளும் அரசன் அதிகாரபூர்வமாக தனது கட்டளையை மக்களுக்கு வெளிப்படுத்தும்போது அதை இசை நிகழ்ச்சி மூலமாக வெளியிட்டதாக வரலாறே இல்லை. பிரசங்கம் நித்திய மரணத்திலிருந்து ஒருவனுக்கு விடுதலை தரக்கூடிய தேவசெய்தியை அளிக்கத் தெரிவு செய்யப்பட்டது. பிரசங்கத்தில் நகைச்சுவைக்கு இடமில்லை, கற்பனைத் திறத்திற்கு இடமில்லை, அநாவசியக் கட்டுக்கதைகளுக் கும் அது நுழைவாயிலல்ல. பிரசங்கத்தின் பிரதான நோக்கம் கேட்பவர் மனத்திற்கு இதமளிப்பதோ, அவர்கள் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் கதைகள், புராணங்களைச் சொல்லி மகிழ்விப்பதோ அல்ல; கேட்பவர்களின் இதயத்தைக் கூறாக்கி கர்த்தரின் முன் கொண்டு வருவதுதான் அதன் பணி. பிரசங்கத்தில் கர்த்தரின் வார்த்தையின் அதிகாரமும், வல்லமையும் வெளிப்பட வேண்டும். இதை இசைவழி ஊழியங்கள் மூலமாகவோ, நாடகத்தாலோ செய்ய முடியாது. அத்தோடு பிரசங்கத்தையும் இத்தோடு தொடர் புடைய போதித்தலையும் தவிர வேறு முறைகளைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளோ, இயேசு கிறிஸ்துவோ, அப்போஸ்தலர்களோ கையாண்டதாக வரலாறில்லை.

இன்று கிறிஸ்தவ ஊழியங்கள் தேவவல்லமை யற்றிருப்பதற்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரசங்கத்திற்கு மதிப்பில்லாமல் போனதும் ஒரு முக்கிய காரணமாகும். பவுல் தனது பிரசங்கத்தை ஆசீர்வதிக்கும்படியாகக் கடவுளிடம் ஜெபத்தில் மன்றாடுமாறு பலமுறை கிறிஸ்தவர்களைக் கேட்டதைத் திருமறையில் வாசிக்கி றோம் (எபேசி. 6:19; கொலோ. 4:3; 2 தெசலோ. 3:1). ஏனெனில் பவுலைப் பொறுத்தவரையில் கவிதையோ, கட்டுக்கதையோ அல்ல, மனுஷ ஞானமோ நய வசனமோ இல்லாது ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்ட பிரசங்கமே (1 கொரி. 2:4) கர்த்தரின் ஆசீர்வாதத்தோடு கேட்போர் இருதயத்தைப் பிளந்து அவர்களைத் தேவனிடம் கொண்டுவரக்கூடிய சாதனமாக இருந்தது. இன்று அத்தகைய பிரசங்கத்திற் காகவும், பிரசங்கிகளுக்காகவும் நாம் கடவுளிடம் மன்றாட வேண்டியவர்களாக இருக்கிறோம். பெடில்லா என்பவர், 'பிரசங்கம் செய்வது எப்போது சபைகளில் நிறுத்தப்படுகிறதோ அன்றே சபைகளுக்கும் அழிவு காலம் எற்படுகின்றது' என்று சரியாகவே சொன்னார்.

இந்த அடிப்படையில் பார்க்கின்றபோது தமிழ்க் கலாச்சாரத்தோடு தொடர்புடைய இசை நிகழ்ச்சிகள், கூத்துக்கள் சமுதாயக் கலாச்சார நிகழ்ச்சிகளாக அமைந்து கேட்போர் மனத்திற்கு மகிழ்ச்சியூட்டுபவை யாக மட்டுமே அமைய முடியுமே தவிர தேவ செய்தியை எடுத்துரைக்கவும், கிறிஸ்தவர்களின் ஆவிக் குரிய வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுத்தும் சாதனங் களாகப் பயன்படவும் கர்த்தரால் தெரிவு செய்யப்பட வில்லை என்பது எமது தாழ்மையான கருத்து. இது வில்லுப் பாட்டுக்கும் பொருந்தும். ஏனைய இசை யோடு தொடர்புடைய கலை நிகழ்ச்சிகளுக்கும், நாடகத்திற்கும் பொருந்தும்.

*(வாசகர்கள் இது குறித்து தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எழுதி அனுப்பலாம். - ஆசிரியர்)*

## கிறிஸ்தவன் யார்?

**"ஒரு கிறிஸ்தவன் கடவுளை அவருக்காகவே, அதாவது அவருடைய சிறந்த பண்பிற்காகவும் ஒப்பற்ற தன்மைக்காகவுமே நேசிக்கிறான். அவ்விதம் நேசிப்பது, கடவுள் தன்னை நேசிக்கிறார் என்ற காரணத்தினால் அவரை நேசிப்பதைவிடச் சிறந்தது; மேலும் அதுவே ஒருவன் இரட்சிக்கப்பட்டான் என்பதற்கு உறுதியான அடையாளமுமாகும். எனினும் தன்னைப்போன்ற ஒரு நிர்ப்பந்தமானவனைப், பரலோகத்தின் கடவுள் ஆதரித்து, ஆசீர்வதித்து, பரிசுத்தமாக்கி, மன்னித்து இரட்சிக்கிறார் என்பதினால் அவன் நன்றியுள்ளவனாய் இருக்கிறான். தேவ தூதர்களும்கூட இவ்விதம் நன்றி செலுத்த இயலவில்லை."**

*(கிறிஸ்தவன் யார்? என்ற நூலிலிருந்து ஒரு பகுதி.)*

# திருச்சபை வளரத் திருமறைக் கோட்பாடுகள்

'சத்தியத்தை அறிந்து கொள்வதற்கு நாம் திருமறையையே நாடி வர வேண்டும்" இது "யெகோவாவின் சாட்சிகள்" என்று அழைக்கப்படும் கூட்டத்தார் தங்களுடைய பிரசுரத்தில் வெளியிட்டிருக்கும் ஒரு வாசகம். இதிலிருந்து நாம் அறிந்து கொள்வதென்னவென்றால் பிசாசும் உண்மையைத் தன் காரியத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளத் தயங்க மாட்டான் என்பதுதான். இந்நிலையில் வெறுமனே திருமறையை நாம் விசுவாசிக்கிறோம் என்று கூறுவது மட்டும் போதாது, நாம் விசுவாசிப்பது என்ன என்பதைத் தெளிவாக, அறிந்திருக்கவும் விளக்கவும் வேண்டும்.

இதனாலேயே நமது முன்னோர் தாம் இரத்தப்பலி கொடுத்து அடைந்த ஆன்மீக விடுதலையை நாம் இழந்து விடக்கூடாது என்ற நன் நோக்கில் வேத சத்தியங்களைத் திருமறைக் கோட்பாடுகளாக விளக்கமாக எழுதி வைத்தனர். இவ்வாறு முன்னூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டு இன்றுவரை உலகெங்கும் சத்தியத்தைப் பின்பற்றும் நூற்றுக்கணக்கான சபைகளினால் விசுவாச அறிக்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள திருமறைக் கோட்பாடுகள்தான் ***1689*** விசுவாச அறிக்கை.

***1855*** இல் ஸ்பர்ஜன் தனது சபையையும், சுற்றிவர இருந்த சபைகளையும் சத்தியத்தில் வளர்க்கவும், போலிப் போதனைகளின் பிடியிலிருந்து பாதுகாக்கவும் இவ்விசுவாச அறிக்கையை மீண்டும் வெளியிட்டார். அத்தோடு தன்காலத்தில் சபைகளும், சமயக் குழுக்களும் திருமறையை விட்டு விலகிச் செல்வதையும் உணர்ந்த ஸ்பர்ஜன் இத் திருமறைக் கோட்பாடுகள் தனது மூப்பர்களும், சபையாரும் சத்தியத்தில் நிலைத்திருக்க பேருதவி புரியும் என்று நம்பினார். அதுமட்டுமல்லாது, 'இத்திருமறைக் கோட்பாட்டின் தெளிவான சத்தியங்களை விசுவாசிக்காது தெளிந்த மனச்சாட்சியுடன் சபையில் அங்கத்தவர்களாக இருக்க முடியாது' என்றும் அவர் தன் சபை மக்களிடம் கூறத்தயங்கவில்லை.

இன்று உலகெங்கும் பல்வேறு மொழிகளிலும் இது மொழி பெயர்க்கப்பட்டு சீர்திருத்த பாப்திஸ்து சபைகளின் (கிருபையின் போதனைகளைப் பின்பற்றும் சபைகள்) விசுவாச அறிக்கையாக விளங்குகிறது. சீர்திருத்தக் கோட்பாடுகளினதும், கிருபையின் போதனைகளினதும் செல்வாக்கு இன்று கிறிஸ்தவர்களை சிந்திக்க வைத்து, தாம் விசுவாசிக்கும் சத்தியங்களில் மேலும் அறிவு பெற வேண்டும் என்ற வாஞ்சையை அவர்களில் ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாது திருமறைக் கோட்பாடுகள் இன்றி சபை வளர முடியாது, சத்தியத்தைப் பாதுகாக்க முடியாது என்று பல நாடுகளிலும் சபைத் தலைவர்கள் உணர்ந்து வருகிறார்கள். பரவசக் குழுக்களிடமும், போலித் தீர்க்கதரிசிகளிடமும், சபை மக்களும், போதகர்களும் சிக்கி அல்லல்படாதிருக்க வேண்டுமானால் சபையாக சத்தியத்தை முறையாக அறிந்திருக்க வேண்டும் என்ற உணர்வு இன்று பலருடைய உள்ளங்களில் நெருப்பாக எரிந்து கொண்டிருக்கின்றது. திருமறையை மட்டுமே நம்பி வாழ வேண்டுமென்ற சீர்திருத்த அக்கினி கொழுந்து விட்டு எரியும் இக் காலத்தில் தமிழிலும் இவ்விசுவாச அறிக்கையை வெளியிடும் அவசியம் ஏற்பட்டு கூடிய விரைவில் நூலாக வெளிவரவிருக்கிறது. இதன் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் இதன் இன்றியமையாத் தன்மை ஆகியவற்றை விளக்கும் முன்னுரைகளுடன் அடுத்த இதழ் வெளிவருமுன் இதனை வெளியிட உத்தேசித்துள்ளோம்.

## *1689 விசுவாச அறிக்கைக்கு C. H. ஸ்பர்ஜன் எழுதிய முன்னுரை*


"***1689*** இல் வெளியிடப்பட்ட இந்த அருமையான போதனைகளை சிறு நூலாக மறுபடியும் வெளியிடுவது முறையானதென்றே எண்ணுகிறேன். சத்தியத்தின் காரணமாக நமக்கு ஒரு கொள்கைச் சின்னம் தேவைப்படுகிறது; மகத்துவமான நற்செய்தியின் நோக்கத்தை நிறைவேற்றத் துணை புரிய, அதன் முக்கிய கோட்பாடுகளுக்கு இச்சிறு நூல் தெளிவான சாட்சியாக விளங்கும்."

"நம்மால் விசுவாசிக்கப்படும் சத்தியங்களின் மிகச் சிறந்த உதாரணமாக இவ்வறிக்கை விளங்குகிறது. மகிமை வாய்ந்த நற்செய்தியின் அரும் பெருஞ் சத்தியங்களுக்கு விசுவாசமாக இருக்கும்படியாக திரித்துவக் கடவுள் நம்மைப் பாதுகாத்து வருவதால் இவற்றைத் தொடர்ந்து பின்பற்றி வாழ்வதில் உறுதியாய் இருக்க வேண்டுமென்று உணர்கிறோம்."

"கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போது உதவுமுகமாகவும், விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், நீதியான வாழ்க்கையில் நாம் வளரத் துணை புரியவுமே இச்சிறு நூல் வெளியிடப்படுகின்றதே தவிர அதிகாரமுள்ள விதிகளாகவோ அல்லது விசுவாச வாழ்கைக்குரிய ஒழுக்கக் கோவையாகவோ அமைவதற்காக அல்ல. இது நமது சபையின் இளைய சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமைவதோடு, வேத ஆதாரங்களுடன் அவர்கள் தங்களுடைய நம்பிக்கைக்கான காரணத்தையும் எடுத்துக் கூற உதவும்."

"உங்களுடைய விசுவாசத்தைக் குறித்து வெட்கப்படாதீர்கள்; இதுவே இயேசுவுக்காகத் தம்மை இரத்தப்பலி கொடுத்தவர்களுக்கும், சீர்திருத்தவாதிகளுக்கும், பரிசுத்தவான்களுக்கும் நற்செய்தியாக இருந்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, இது பாதாளத்தின் வாசல்களாலும் மேற்கொள்ளப்படமுடியாத கடவுளின் சத்தியமாக இருக்கிறது. உங்களுடைய வாழ்க்கை உங்கள் விசுவாசத்தை அலங்காரம் செய்யட்டும்; உங்களுடைய உதாரணம் உங்கள் கோட்பாடுகளைப் பரிந்துரை செய்யட்டும். மேலாக, இயேசுவுக்குள்ளாக வாழ்ந்திருந்து, அவர் வழிப்படி நடந்து, அவரால் அங்கீகரிக்கப்பட்டவையல்லாத வேறெந்தப் போதனையிலும் நம்பிக்கை வைக்காது பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்கு சொந்தமாக்கப்பட்டிருங்கள். இங்கே விளக்கப்பட்டிருக்கும் கடவுளின் வார்த்தையை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்."

# எண்ணங்கள்



வேதத்தை சரியானபடி புரிந்து கொள்ளாமல் குழப்புகிறவர்களின் மத்தியில் இத்தகைய தெளிவான சத்தியங்களைச் சொல்கிற ஒரு பத்திரிகை வெளி வருவது குறித்து மிகவும் மகிழ்கிறேன். சத்தியம் மட்டுமல்லாது அதன் இலக்கியத் தமிழ் நடையும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. எமது சபை மக்கள் பத்திரிகையை வாசிக்க ஊக்குவிக்கிறோம்.

*சகோ. இமானுவேல் ராஜா, கோவை, தமிழ்நாடு*

திருமறைத்தீபத்திற்கு நன்றி. 'கெரிஸ்மெட்டிக் இயக்கத்தின்' சூழ்ச்சிகளைப் பற்றித் தெளிவாக விளக்கும் இதைப்போன்ற பத்திரிகையை நான் பார்த்ததில்லை. சத்தியத்திற்காகத் தொடர்ந்து போராட உங்களைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. நான் அனுப்பியுள்ள முகவரிகளுக்கு பத்திரிகையை அனுப்புங்கள்.

*சகோ. ஆர். எஸ். குருவில, பத்மு ஜெப வீடு, கோவை,*

திருமறைத்தீபத்திற்கு நன்றி. தொடர்ந்து படித்து வருகின்றேன். எனது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பத்திரிகை மிகவும் ஆசீர்வாதமாக இருக்கின்றது. இதன் மூலம் வேத இரகசியங்களை அறிந்து கொள்ள உதவி செய்த தேவனுக்கு நன்றி சொல்கிறேன். தொடர்ந்து தவறாமல் பத்திரிகையை அனுப்பவும்.

*ஆர். ஜோர்ஜ், சென்னை.*

தாங்கள் வெளியிடும் திருமறைத்தீபம் பார்த்தேன். நம் ஆண்டவராகிய கர்த்தரின் அறிவில் நான் மேலும் வளர இது துணை புரியும். கேள்வி-பதில், கிறிஸ்தவக் கோட்பாடுகள் பகுதிகள் நல்ல பயனுள்ள முறையில் உள்ளன. தொடர்ந்து அனுப்புங்கள்.

*ஸ்ரீதர், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம், கோவை*

இந்தக்காலத்தில் சத்தியத்தை உண்மையாகப் போதிக்கிறவர்கள் மிகக் குறைவு. பத்திரிகையை நீங்கள் தொடர்ச்சியாக அனுப்பி வைத்தால் வேதத்தை சரியாகப் புரிந்து கொள்ளவும், எனது ஆத்தும வளர்ச்சிக்கும் அது துணையாக இருக்கும்.

*எஸ். இளமதி, தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம், கோவை*

'விவிலியத்தை விற்று வியாபாரமாக்கும் வீணர் தம் கூட்டம் வெருண்டோடிட வேரடி மண்ணாய் வீழ்ந்திட விரைந்தெழுதீபம்! வார்த்தையில் வடிவத்தில், வியத்தகு வனப்பில், வினாவிடை வழிகளில் விளக்கமாய், வில்லியம் கேரி வாழ்க்கையும் வழங்க வரும் தீபம்! திக்கெட்டும் திரளட்டும் திசையெங்கும் திகழட்டும் தந்தை சுதன் ஆவி தந்த திருமறைத்தீபம்!'

ஓராண்டு நிறைவு இதழ் மட்டுமே காண நேர்ந்தது. முந்தைய இதழ்களும், நூல்களும் தேவை. தெள்ளிய கருத்துக்கள், துணிவான கருத்துக்கள். ஒவ்வொரு பக்கமும் படித்துப் பாதுகாக்கப்படவும், கடைப்பிடிக்க வேண்டியதுமான கருத்துப் பெட்டகம்.

*வியாசர் எஸ். லாரன்ஸ், சென்னை, தமிழ்நாடு*


திருமறைத்தீபம் சஞ்சிகை வாசிக்கக் கிடைத்தது. மிகவும் பிரயோசனமாய் இருந்தது. மலையக மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் எனக்கு மட்டுமல்லாது எமது நூலகத்திற்கு வருபவர்களுக்கும், சபை விசுவாசிகளுக்கும் பத்திரிகை பிரயோசனமாக இருக்கும் என்று நம்புகிறேன். தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். அனுப்பி உதவுங்கள்.

*சகோ. ஜோசப் ஸ்ரீதரன், மஸ்கெலியா, ஸ்ரீ லங்கா*

நான் மிகவும் விரும்பிப் படிக்கின்றவற்றில் எனக்குப் பிடித்தமான, விளக்கமான பத்திரிகை இது எனக் கூறுவேன். ஒரு குறை, ஒக்டோபர் - டிசம்பர் 95 இதழில் புத்தக விமர்சனம் வரவில்லை. அது தொடர வேண்டும் என்பது என் வேண்டுகோள். கிறிஸ்தவக் கோட்பாடுகள் (வினா-விடை) மிக நன்று. வில்லியம் கேரியின் கதை மிக சுவாரசியம். கேள்வி பதில் பகுதி தெளிவாக இருக்கின்றது. ஏனைய தொடர் கட்டுரைகள் நன்று. மீதிப்பகுதிகளுக்குத் தாகத் துடன் காத்திருக்கிறேன். உங்களது மூன்று நால்களும் பிரயோசனமானவை. சுருங்கக் கூறினால் கடுகு விதைதான். தமிழ் வசனநடை அருமை.

*டி. பி. அஜித்திரன், கொழும்பு, ஸ்ரீ லங்கா*


## ஆசிரியரெழுதிய சில நூல்கள்



**1. திருமறை (20 பக்கங்கள்)**

திருமறையின் அதிகாரத்திற்கு பலரும் உட்பட மறுக்கும் இக்காலத்தில், நாம் விசுவாசிக்க வேண்டிய அதன் அதிகாரத்தையும், போதுமான தன்மையையும் இந்நூல் விளக்குகிறது.

**2. ஆன்மீகக் குழப்பம் (20 பக்கங்கள்)**

இன்று சுற்றிவரக் கிறிஸ்தவர்கள் மத்தியில் பார்ப்பது எழுப்புதலா? இல்லை ஆன்மீகக் குழப்பமா? என்பதை வேதபூர்வமாக ஆராய்கின்றது இந்நூல்.



**3. திருமறையா? திராவிட சமயமா? (28 பக்கங்கள்)**

கிறிஸ்தவத்திலிருந்துதான் ஆதித்திராவிட சமயங்கள் தோன்றின என்ற தவறான போதனையைப் பரப்பி வருபவர்களின் வாதங்களைத் திருமறையின் அடிப்படையில் ஆராய்கிறது இந்நூல்.



*தமிழ்நாட்டில்:*
**Bible Lamp,**
**'Atman Illam',**
**73. Yercaud Main Rd,**
**Salem 636008**
**(Rs. 5.00 each including postage)**

*ஸ்ரீ லங்காவில்:*
**T. B. Surendren**
**19. Rajasinghe Rd,**
**Colombo 6**
**(Rs. 10.00 each including postage)**

*ஏனைய நாடுகளில் உள்ளோர் ஆசிரியருக்கே எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்*